விடுதலைத் தூதன்
Herald of Deliverance

February 2008
No:52:02 Price : Rs:5.00

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

நல்ல சமாரியன் இயேசு

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை

அன்பான விடுதலைத் தூதன் வாசகர்களுக்கு

இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள்!

விசுவாசிகள் தங்களது பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்விலும், பள்ளிக் கல்வியிலும் அதிகமாகக் கவனம் செலுத்தி முன்னேறும்படி, அவர்களை ஊக்குவிக்கக் கோருகிறேன். மட்டுமன்றி, தங்களது பிள்ளைகள் கர்த்தருக்குப் பிரியமான வழியில் நடக்க ஊக்கமாக ஜெபித்து, அவர்களுக்குப் புத்திசொல்வது மிக, மிக அவசியம்.

"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்" (ஏசாயா 54:13) என்றுள்ள வசனத்தை விசுவாசிகள் பற்றிக்கொண்டு, உரிமைபாராட்டி ஜெபித்தல்வேண்டும்.

நமது நாட்டின் வடமாநிலங்களில் சத்தியத்திற்கு விரோதமாகக் காணப்படும் எதிர்ப்பு சக்திகளை, அங்கு வாழும் ஊழியர்கள் விசுவாசத்தோடு சந்திக்கத்தக்கதான கிருபைகளைத் தேவன் தந்தருளும்படி, அவர்களுக்காக நாம் ஒருமனப்பட்டு, ஆங்காங்கே கூடி ஜெபிக்கவேண்டும். சமீப நாட்களில் ஒரிசா, மற்றும் சில மாநிலங்களில் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக எழும்பின தீய சக்திகளை அன்றாட செய்தித்தாள்களில் நாம் வாசித்தறிகிறோம். வேதத்தில் கூறியுள்ள கடைசிக்கால உபத்திரவங்களின் ஆரம்ப நாட்களில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை நினைவிற்கொள்ளுவோம். பல கிறிஸ்தவ சபைகளும், தேவ ஊழியர்களும் தீயினால் எரிக்கப் பட்டதை நாம் நன்கு அறிவோம். இவைகள் நம் உள்ளத்தை உருக்குகின்ற செய்திகள் அன்றோ?

நமது நாட்டின் வட மாநிலங்களில் நடைபெற்ற கொடிய செயல்கள் தென்மாநிலங்களிலும், சீக்கிரத்தில் நடைபெறும் என்பது நிச்சயமே நிச்சயம். ஆகையால், நாம் இந்நாட்களில் ஒரு பெரிய எழுப்புதலுக்காகவும், ஆவியின் பின்மாரி மழைக்காகவும் ஜெபிக்கவேண்டியது அவசியம்.

"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையா யிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்" (ரோமர் 12:11,12) என்று வேதம் கூறுகிறது.

இப்புத்தாண்டின் இரண்டாம் மாதத்திற்குள் பிரவேசித்துள்ள நாம், தேவராஜ்ஜியத்துக்கென்று எடுத்துள்ள புதிய தீர்மானங்களை நிறைவேற்ற, பிரயாசப்படுவோம். ஒவ்வொரு சபையும், தங்களது அருகாமையில் இருக்கிற இடங்களில் ஜெபக்குழுக்களை ஏற்படுத்தவேண்டும்; பின்னர், அவைகள் சிறு சிறு சபைகளாக இயங்கவேண்டும்; இதுவே, எனது பாரமும் வாஞ்சையுமாகும்.

இவ்வாண்டு கர்த்தர் திரளான ஆத்துமாக்களை நமக்குத் தரப்போகிறார்; இனிக் காலம் செல்லாது. இதை நாம் அறிந்து, கிறிஸ்துவுக்குள் முன்னேறி, சபைகளைக் கட்டுவோமாக. தியாகமும், உண்மையும் நிறைந்த அநேக ஊழியர்களைக் கர்த்தர் தாமே எழுப்புவாராக. நம்முடைய இருதயத்தின் வாஞ்சைகளையும் கர்த்தர் நிறைவேற்றுவாராக. ஆமென்.

அன்புள்ள

R. K. Samy

நல்ல சமாரியன் இயேசு

(போதகர் எம்.கே. சாம் சுந்தரம்)

இயேசு கிறிஸ்து மானிட அவதாரம் எடுத்து, முப்பத்து மூன்றரை ஆண்டுகள் இப்பூவுலகில் வாழ்ந்தார். அப்போது அவர் மக்களுக்குப் பல உவமைகளைக் கூறி, முக்கியக் கருத்துக்களை விளக்கிவந்தார். அவற்றுள் ஒரு உவமையிலிருந்து அறிந்துகொள்ளும் பாடத்தைக் கீழே காண்போம். இது நல்ல சமாரியனாம் இயேசுவைக் குறித்து விளக்கும் உவமையாகும்.

நியாயசாஸ்திரி ஒருவன் இயேசுவண்டை வந்து, தான் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ள என்ன செய்யவேண்டும்? என்று கேள்வி கேட்டான். அதற்கு இயேசு நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளைக் கைக்கொண்டு பிழைக்கும்படிச் சொன்னார்.

"... *உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக*" (லூக்கா 10:27) என்று நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறது; "*எனக்குப் பிறன் யார்?*" (லூக்கா 10:29) என்று, அவன் இயேசுவினிடத்தில் கேட்டான்.

அப்போது இயேசு கீழ்க்காணும் உவமையிலிருந்த கருத்தை விளக்கினார். லூக்கா 10 ஆம் அதிகாரம் 30 முதல் 37 வரையுள்ள வசனங்களை வாசித்தறியவும். இப்பகுதியின் ஒவ்வொரு வசனத்தையும் தனித்தனியே விளங்கி, கற்றுக்கொள்ளுவோமாக.

நல்ல சமாரியனின் உவமையில் இரு கருத்துக்கள் அடங்கியுள்ளன. முதற்கண், நாம் மற்றவர்களுக்கு எப்படி நன்மை செய்யவேண்டும், எப்படி ஆத்தும ஆதாயஞ்செய்யவேண்டும் என்பது குறித்தும், அடுத்து, ஒரு பாவி பரிசுத்தவானாக மாறி, எவ்விதம் பரமேறுகிறான் என்பது குறித்தும் இவ்வுவமையில் கூறப்பட்டுள்ளன.

பாலஸ்தீன நாட்டின் மலைப்பகுதியில் புகழ்பெற்று விளங்கிய பட்டணம் எருசலேம் ஆகும். "*பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், ...*" (சங்.125:2) என்றுள்ள வசனம் இதனைத் தெளிவுபடுத்துகின்றது. இது சத்திய நகரம் என்றும், பரிசுத்த பர்வதம் (சகரியா 8:3) என்றும் அழைக்கப்படுகிறது. எருசலேம் கர்த்தருடைய சிங்காசனம் இருக்குமிடம் என்று, எரேமியா 3:17 இல் கூறப்பட்டு உள்ளது. அது சமாதானத்தின் இடம், செழிப்பான இடம் என்று, சங்கீதம் 122:7 ஆம் வசனத்தில் வாசிக்கிறோம்.

எருசலேம், ஏதேன் தோட்டத்திற்கு ஒப்பான இடமாகும். ஏதேன் தோட்டம் ஆரோக்கியத்திற்குச் சிறந்த இடம். மனிதன் சகல அதிகாரத்தையும் பெற்றிருந்த இடம் அது. ஏதேன் தோட்டத்தின் சமாதானமும், மகிழ்ச்சியும், செழிப்பும் எருசலேம் பட்டணத்தில் காணப்பட்டது. அங்கு வாழ்ந்த மனிதரிடையே ஒரு குறைவும் காணப்படவில்லை.

இவ்வித சமாதானத்தை—மகிழ்ச்சியை—பெற்றிருந்த ஓர் உன்னத இடத்திலிருந்து ஒரு யூத மனிதன் புறப்பட்டு, சாபம் நிறைந்த இடமாகிய எரிகோவிற்குச் சென்றான்.

எருசலேம் பட்டணம் கடல்மட்டத்திற்குமேல் 3000 அடி உயரத்திலிருக்கிறது. அதற்குக் கீழே 17 மைல் தொலைவில் காணப்படுவது எரிகோ. ஆங்கில வேதாகமத்தில், 'He went down' என்று கூறப்பட்டுள்ளது, இதனை நன்கு புலப்படுத்துகின்றது. அதாவது, பரிசுத்த பர்வதத்திலிருந்து, பாவமும் சாபமும் நிறைந்த எரிகோவுக்குப் பயணஞ்சென்றான் அந்த யூதன்.

"*இந்த எரிகோ பட்டணத்தைக் கட்டும்படி எழும்பும் மனுஷன் ... அதின் அஸ்திபாரத்தைப் போடுகிறபோது தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது தன் இளைய குமாரனையும் சாகக் கொடுக்கக்கடவன்*" என்று, எரிகோ பட்டணத்தைப் பிடித்த இஸ்ரவேலின் தலைவன் யோசுவா கூறியிருந்தான் (யோசுவா 6:26). ஆம், எரிகோ ஒரு சாபம் நிறைந்த இடம்தான்.

எருசலேமிலிருந்து எரிகோ செல்லும் வழி மிகவும் கரடு முரடானது; அது பயம் நிறைந்த இடம்; கள்ளர்கள் கொள்ளையடிக்கும்படியாய்ப் பதுங்கியிருக்கும் இடம் அது. தேவன் பூமியை உண்டாக்கும்போது, அதைச் சபிக்கும்படியாய் உண்டாக்கவில்லை. மனிதனின் பாவத்தினாலும் கீழ்ப்படியா

மையினாலும்தான் அதைச் சபித்தார். அந்த யூதன் சமாதானம் நிறைந்த எருசலேம் பட்டணத்தை விட்டு, சாபம் நிறைந்த எரிகோவிற்குச் சென்றமை எத்துணைத் துக்கமானது!

அன்பான்வர்களே! தேவன் உங்களை வைத்திருக்கும் உயர்ந்த பரிசுத்த இடத்தைவிட்டு, வழி விலகி, கரடு முரடான பாவ வழியில் செல்ல முற்படாதிருங்கள். **அந்த யூத மனிதன் வழிதவறினது போல நீங்களும் வழி தவறுவீர்கள். ஆகையால் எச்சரிப்படைவீர்களாக.**

1. *"இயேசு பிரதியுத்தரமாக: ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் **கள்ளர் கையில் அகப்பட்டான்;** அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள்"* (லூக்கா 10:30).

எரிகோவை நோக்கிப் பயணம் செய்த மனிதன் கள்ளர் கையில் அகப்பட்டது, ஓர் ஆவிக்குரிய உண்மையை விளக்குகின்றது.

"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவான் 10:10).

அன்பானவர்களே! இன்று உண்மையான கள்ளன் யார்? பிசாசுதான்! தேவாதி தேவன் உங்களுக்குப் பரிசாகக் கொடுத்த பரிசுத்தம், மகிழ்ச்சி, செழிப்பு அனைத்தையும் பிசாசானவன் திருடி, உங்களைக் கேவலமான நிலைக்குக் கொண்டுவர முயலுகிறான் என்பதை அறிவீர்களாக; எச்சரிப்புடன் வாழுவீர்களாக.

2. ***"அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.***

*அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, **பக்கமாய் விலகிப் போனான்**"* (லூக்கா 10:31,32).

இங்கு, ஆசாரியனையும் லேவியனையும் காண்கிறோம். இவர்களது பணிகள் யாவை? இவர்கள் பாரம்பரியத்துக்கோர் எடுத்துக்காட்டு ஆவர். முழு நேர ஊழியரும் ஆவர். மிருகங்களின் இரத்தத்தைச் சிந்தி, மக்களுக்குப் பாவநிவிர்த்தியை உண்டுபண்ணுவதே ஆசாரியனது வேலை. அதாவது, பலிபீடத்துக்கு அருகே எப்போதும் நின்று வேலை செய்பவனே ஆசாரியன்.

ஆசரிப்புக்கூடாரத் திரைகளுக்குள் சென்று, தேவனுக்கு ஊழியஞ்செய்தவன் லேவியன் ஆவான். ஆசாரியன், லேவியன் இருவரும் மனுக்குலத்துக்கு உதவமுடியாத, மதச்சட்டங்களுக்கும் மதப்பாரம்பரியத்திற்கும் ஒப்பானவர்.

"அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யமாட்டாதே" (எபி.10:4).

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்களும், தீர்க்கதரிசனங்களும் ஆசாரிப்புக்கூடாரத்துக்குள் பணிவிடை செய்யும் லேவியன், ஆசாரியன் ஆகியோரும் மனுக்குலத்தின் பாவ நிவிர்த்திக்காக ஏதும் செய்யமுடியாது. இவர்கள் தங்களது பாரம்பரியத் தொழில்களைக்குறித்து மார்தட்டி வீரம் பேசலாமேயொழிய, அவர்களது பூசைகளும் கிரியைகளும் பாவநிவிர்த்தியைத் தருவதில்லை.

எரிகோவிற்குப் பயணம் செய்கையில் வழியிலே காயப்பட்டு, உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த அந்த யூதனைப் பார்த்து, இவ்விருவரும் கண்சாடையாய்விட்டுச் சென்றனர். ஆம், **இன்று எந்த மதமும், மதக்குருக்களும், மதச் சட்டங்களும் பாவ வழியில் செல்லும் மனுக்குலத்துக்கு மீட்பை—இரட்சிப்பை—விடுதலையை—கொடுக்கமுடியாது என்பதற்கு இவை ஒப்பனையாகும்.**

3. *"பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், **அவனைக் கண்டு, மனதுருகி**"* (லூக்கா 10:33),

காயப்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்த யூதனைக் கண்டு, ஆசாரியனும், லேவியனும் அசட்டை செய்து போய்விட்டனர். ஆனால், அடுத்து அங்கு வந்த சமாரியனோ மனதுருகினான்; கிட்டவந்தான். இந்த சமாரியன் யார்? இயேசுவுக்கு நிழலாட்டமானவன்.

யூதர்களும் சமாரியரும் குலத்திலும், பழக்க வழக்கத்திலும், தரத்திலும் வேறுபட்டவர்கள். இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்திரீயிடம் தண்ணீர் தரும்படிக் கேட்டபோது அவள், *"நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்"* (யோவான் 4:9).

யூத குலத்தில் மனுமக்களை இரட்சிக்க அவதரித்த இயேசுவை எப்படி யூதகுலத்தார் அசட்டை செய்தனரோ, அதுபோன்றே, காயப்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்த யூதனை, ஆசாரியனும், லேவியனும் அசட்டை செய்தனர். இயேசுவோ, பாவிகளை, நோயுற்றவர்களைக் கண்டு, காணாதவர்போலச் செல்லுகிறவர் அல்லர்;

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28).

இயேசு, வருத்தப்பட்டுப் பாவபாரத்தால் வருந்துகிறவர்களை நோக்கி, *"இளைப்பாறுதல் தருவேன்"* என்றார். இன்று குடும்ப அங்கத்தினர்கள் தங்களுக்கு இன்னல் விளைவிக்கும் பிள்ளைகளை நோக்கி, "உதவாக்கரை", "தண்டசோறு" என்றெல்லாம் வைகின்றனர். இயேசுவோ அவ்விதம் அவர்களை உதாசினப்படுத்தாது, அவர்களிடம் மனதுருகுவார்.

சரியான திசைதெரியாது அலைந்து சென்ற மக்களை நோக்கி அவர், *"மேய்ப்பனில்லாத ஆடுகள்"* என்று கூறி மனதுருகினார். குஷ்டரோகத்தினால் பாதிக்கப்பட்டு, சரீரம் உருக்குலைந்த மனிதனைக் கண்டு மனதுருகி, அவனைத் தொட்டுச் சுகப்படுத்தினார். தனக்கிருந்த ஒரே மகனைப் பறிகொடுத்த நாயீன் ஊர் விதவையின் கண்ணீரைக் கண்டு மனதுருகி, அவனது பாடையைத் தொட்டு அவனை உயிரோடு எழுப்பினார்.

"என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37) என்றார், மனதுருக்கம் நிறைந்த நல்ல சமாரியனாம் இயேசு.

அன்பானவர்களே! உலகம் உங்களைப் புறம்பே தள்ளலாம்; உங்களது வேலை ஸ்தலத்திலே, தொழிற்சாலையிலே, உங்களது குடும்பத்திலே நீங்கள் ஒதுக்கப்பட்டவர்களாகக் காணப்படலாம். மனதுருகும் இயேசு உங்களுக்கு உண்டு. கவலையற்க.

ஏற்கனவே இயேசுவை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்தவப் பயணத்திலே பின்மாற்றமடைந்து, முன்னேற முடியாது தவித்துக்கொண்டிருக்கிறவர்களே! நல்ல சமாரியனாம் இயேசு உங்களது பின்மாற்றத்தினின்றும் இன்று விடுதலை அளிக்க, உங்கள் அருகே வந்து நிற்கிறார். அவரைப் பற்றிக்கொள்ளுங்கள். கிறிஸ்தவப் பயணத்தில் குற்றுயிராய்க் கிடக்கும் நிலையைவிட்டு, எழும்புங்கள்; முன்னேறுங்கள்.

4. *"கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, ..."* (லூக்கா 10:34).

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது முடங்கிக் கிடக்கும் ஒரு வாழ்க்கையல்ல, இரட்சிப்பைப் பெற்றபின்னரும் முன்னேறுகிற வாழ்க்கையாகும். குற்றுயிராய்க் கிடந்த அந்த மனிதனை நல்ல சமாரியன் அங்கேயே விட்டுவிட்டுப் போகாமல், அவனுடைய காயங்களில் எண்ணெயையும், திராட்ச இரசத்தையும் ஊற்றினான். இவ்விரண்டும் காயங்களைக் குணப்படுத்தும் நல்மருந்துகள் ஆகும். இவற்றை அவன் காயங்களில் பூசி குணமாக்கினான்.

"அது ... எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது" (ஏசாயா 1:6).

"உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்" (1 தீமோ.5:23).

நல்ல சமாரியனாம் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் நமக்கு இரு நிவாரணங்கள் உண்டு. முதற்கண், பாவ வாழ்க்கையினின்று விடுதலை; அடுத்து, சிலுவைப் பாதையில் அவருக்கு ஏற்பட்ட தழும்புகளினால் நமக்குக் கிட்டும் சுகமாகும் (1 பேதுரு 2:24).

"மனுஷனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராட்சரசத்தையும், அவனுக்கு முகக்களையை உண்டுபண்ணும் எண்ணெயையும், மனுஷனு

டைய இருதயத்தை ஆதரிக்கும் ஆகாரத்தையும் விளைவிக்கிறார்" (சங்.104:15).

திராட்சரசம், மகிழ்ச்சியை உண்டுபண்ணும் இரட்சிப்பைக் காட்டுகிறது. எண்ணெய், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறிக்கிறது. *"என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது"* (சங்.23:5) என்றான் தாவீது.

ஆம், இயேசு கிறிஸ்து, மற்றவர்களால் காயப்பட்ட உங்களது உள்ளத்தின் காயங்களைக் கட்டி, குணமாக்குகிறவர்; இரட்சிக்கிறவர்; தமது பரிசுத்த ஆவியாகிய எண்ணெயை ஊற்றுகிறவர். *"அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்"* (1 பேதுரு 2:24) என்று வேதம் கூறுகின்றது.

இரட்சிப்பின் சந்தோஷம் (பாவமன்னிப்பின் நிச்சயத்தினால் கிட்டுவது) உலகில் எந்தப் பொருட்களாலும், எந்த மனிதராலும் கிடைக்காத ஒன்று; இயேசு ஒருவர்மட்டுமே உலகச் சிற்றின்பங்களில் சிக்கிக் காயப்பட்ட மக்களைத் தமது சந்தோஷத்தால் நிரப்புகிறவர்.

தாவீது பாவத்தில் விழுந்தபோது இரட்சிப்பின் சந்தோஷத்தை இழந்தான். அப்பாவத்தை அறிக்கையிட்டு தேவனிடம் மன்னிப்புக் கேட்டான். *"உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி* (எண்ணெய்க்கு ஒப்பான பரிசுத்த ஆவி) *என்னைத் தாங்கும்படி செய்யும்"* என்றான் (சங்.51:12). அப்படியே திரும்பவும் அவைகளைப் பெற்றுக்கொண்டான்.

அன்பானவர்களே! இரட்சிக்கப்பட்ட பின்பு, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றபின்பு, பரிசுத்த ஆவியாகிய எண்ணெயினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறீர்களா? ஆராயவும்.

பரிசுத்த ஆவியின் நிறைவு உங்கள் நாவில்மட்டும் இருந்தால் போதாது. **உங்களது உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரையிலும் பரிசுத்த ஆவியின் நிறைவு காணப்படவேண்டும். உங்களது ஒவ்வொரு அவயவமும் பரிசுத்த ஆவியானவரின் விருப்பத்தை நிறைவேற்றவேண்டும் என்பதை அறிவீர்களாக.**

5. *"... அவனைத் தன் ... சத்திரத்துக்குக் கொண்டுபோய், ..."* (லூக்கா 10:34).

நல்ல சமாரியன் குற்றுயிராய்க் கிடந்த மனிதனது, காயங்களைக் கட்டுவித்து, சத்திரத்துக்குக் கொண்டு போய்விட்டான். 'சத்திரம்' என்பது யாது? நாம் ஆராதிக்கும் தேவ சபையே.

*"சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் நாயகர்; நான் உங்களை ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டு பேருமாகத் தெரிந்து, **உங்களைச் சீயோனுக்கு அழைத்துக்கொண்டுவந்து**"* (எரேமியா 3:14),

பாவத்தினால் காயம்பட்ட உங்களைக் கர்த்தர் இரட்சித்து, உங்களுக்கு ஏற்ற, முன்குறிக்கப்பட்ட தேவ சபைக்குள் (சத்திரத்திற்குள்) கொண்டுவந்து சேர்க்கிறார்.

உங்களுக்கென முன்குறிக்கப்பட்ட சபைக்குள் வந்தால்மட்டுமே, நீங்கள் சரியாகப் பராமரிக்கப்படமுடியும் என்பது இதன் விளக்கமாகும். **ஆகவே, விசுவாசிகள் அங்கும் இங்குமாக அமைந்த தேவ சபைக்குள் செல்வது சரியன்று.**

"... சத்திரத்தான் கையில் கொடுத்து; ..." (லூக்கா 10:35).

சத்திரத்தான் யார்? நீங்கள் ஆராதிக்கச் செல்லும் சபையின் போதகர் ஆவார். அந்தப் போதகர் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம்பண்ணுகிறவர் (எபி.13:17). உங்களைச் சரியான வழியில் நடத்த தேவன் தம்முடைய இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பனை—சத்திரக்காரனை—உங்களுக்குத் தந்திருக்கிறார் (எரே.3:15) என்பதை அறிந்து செயல்படுங்கள். **அதாவது, உங்களுக்கென குறிக்கப்பட்ட ஆராதனை ஸ்தலத்துக்குச் சென்று, உங்கள் போதகரோடு இணைந்து, நீங்கள் தேவனோடு இனிமையான ஐக்கியங்கொள்ளவேண்டும் என்பது இதன் விளக்கமாகும்.**

6. *"... இரண்டு பணத்தை எடுத்து, ... கொடுத்து: ..."* (லூக்கா 10:35).

"வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்

லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச் சமில்லை'' (ஏசாயா 8:20).

இரண்டு பணம் என்பது பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டுச் சத்தியங்களை விளக்கும் சொற்கள் ஆகும். மேற்காணும் வசனத்தில் வேதம் என்றும், சாட்சி ஆகமம் என்றும் கூறப்பட்டுள்ளது. இரு ஏற்பாட்டுப் புத்தகங்களைச் சுட்டிக்காட்டுவனவாகும்.

''புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது'' (2 கொரி.3:6).

தமிழ் வேதாகமத்தில், 2 கொரி.3:6 இல் கூறப்பட்டுள்ள, *'புதுஉடன்படிக்கை'* என்ற சொல் ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பில், *'புதிய ஏற்பாடு'* என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இரண்டு ஏற்பாடுகளும் மிக, மிக அவசியம்.

பழைய ஏற்பாட்டின் சட்டங்களாகிய பாரம்பரியங்களை, புதிய ஏற்பாட்டில் வாழும் விசுவாசிகள் பின்பற்றக்கூடாது. பழைய ஏற்பாட்டுச் சரித்திர சம்பவங்கள் அனைவும், புதிய ஏற்பாட்டில் வாழும் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களாக—முன் உதாரணங்களாக—அமைந்துள்ளன. அவைகளைக் கற்று, நாம் எச்சரிப்படைய வேண்டும் என்பது இதன் விளக்கம்.

நாம் நமது சத்திரக்காரனாகிய மேய்ப்பரின் கீழ் தான் காணப்படுகின்றோம். அவரது போதகத்துக்குக் கீழ் அடங்கி வாழ்வோமாக.

7. *''... நான் திரும்பி வரும்போது ...''* (லூக்கா 10:35).

ஆம், நல்ல சமாரியனாம் இயேசு இப்பூவுலகிற்கு, "திரும்பவருவேன்" என்று முன்னுரைத்துப் போனார். யோவான் 14:1-3 வாசித்தறியவும்.

இயேசு கிறிஸ்து திரும்பி இப்பூவுலகில் வந்து, நம்மைத் தம்முடைய வாசஸ்தலத்துக்கு அழைத்துச் செல்வார்.

அன்பானவர்களே! கடைசிவரை தேவன் நம்மை இவ்வுலகின் சத்திரத்திலேயே விட்டுச்செல்லமாட்டார். அவரோடு இருக்க அழைத்துச் செல்வார்.

''... அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பிவரும்போது அதை உனக்குத் தருவேன்'' (லூக்கா 10:35).

'அதிகச் செலவு' என்பது நம்மில் உள்ள குறைபாடுகளைக் குறிக்கின்றது. "நீங்கள் பூரணர்" என்று இயேசு ஒருவரையும்குறித்துக் கூறமுடியாது. அப்படிப்பட்ட மக்களோ, சபையோ, இப்பூமியில் இல்லை என்றால் அது மிகையாகாது.

''நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன்'' (பிலி.3:12).

அப்போஸ்தலரெல்லாரிலும் மிகச் சிறந்தவனாகக் கருதப்படும் பவுலும் தன்னைத் தேறினவன் என்று கூறவில்லை. இந்தத் தேர்ச்சி—பூரணம்—நிறைவு—எப்போது உண்டாகின்றது?

''... ஆகிலும் ... அறிந்திருக்கிறோம்'' (1 யோவான் 3:2).

ஆம், பூரணம் அடையாத நாம் இயேசு கிறிஸ்து வரும்போது, கண்ணிமைப்பொழுதில்—ஒரு நொடிப் பொழுதில்—பூரணராக்கப்படுவோம், மறுரூபப்படுவோம். சத்திரத்திலிருந்து நம்மை விடுவித்து, அவர் தம்மோடு அழைத்துச் செல்வார். குறைவுகள் அந் நேரத்தில் நிறைவுபெறும்.

இக்கருத்தை நன்மையாகக் கருதி, நாம் விழிப் பற்ற, தோல்வியுடைய வாழ்க்கை வாழ்தல்கூடாது. அவ்விதச் சிந்தை நம்மில் காணப்படுமாயின் நாம் கைவிடப்படுவோம் என்பது திண்ணம்.

ஆகையால், அவர் வரும்வரை சத்திரமாகிய சபையில், சத்திரக்காரனான மேய்ப்பரின் உபதேசத்திற்குக் கீழ்ப்பட்டு, அடங்கி நடத்தல் நமக்கு அவசியம். நல்ல சமாரியனாம் இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வந்து, நம்மை அழைத்துச் செல்லப்போவதால் நாம் மகிழ்ந்து களிகூருவோமாக.

THE DESIRE OF THE RIGHTEOUS

(Pastor M.K.Sam Sundaram)

"The desire of the righteous is only good" (Proverbs 11:23).

The message I wish to share with you is based on the Tamil word 'ஆசை' ('aasai') which has no equivalent in English. The words nearest in meaning are: 'longing', 'craving', 'aspiration', 'hankering' and 'yearning'. I think none of them can express the meaning of the Tamil word exactly as it does. The desire for something or somebody or a purpose is so deep-seated in your heart that it makes you cleave to it. In other words, it makes you hanker after or yearn for something which you want to get hold of.

God has given this distinctive trait to mankind—both the righteous (virtuous) and the wicked (evil doers)—for a purpose. The wiseman says, *"The desire of the righteous is only good:"* and the psalmist rightly observes, *"...the desire of the wicked shall perish"* (Ps.112:10). The righteous have a desire for good things and they desire to do good, whereas, the desire of the wicked is for everything that is bad or undesirable and, therefore, they do evil. Ultimately, it results in complete ruin.

The word 'desire' is used for the first time in Genesis chapter 3, the last part of verse 16. It says, "*...thy desire shall be to thy husband, and he shall rule over thee.*" This is God speaking to Eve after she succumbed to temptation by the devil and sinned. God told her that she would bring forth children after much pain and suffering and that He would increase her labour and pains in childbearing. Then He added that her craving would be for her husband.

Those words of God to Eve make it clear that desire is an inherent characteristic that He has given to every human being, but, as we see it in our day-to-day life, different people have desires for various things — some, good and others, evil.

I'd like to examine from Scripture the three good things virtuous people desired so that you could also develop such a desire and fulfil the purpose for which God has put it in your heart.

The desire for God's sanctuary

"To see thy power and thy glory, so as I have seen thee in the sanctuary" (Ps.63:2).

King David is in the wilderness of Judah. (The title of the psalm says so). Now, there's a yearning in his heart to see the power and glory of God even in the wilderness of Judah where he is forced by circumstances beyond his control to remain for a while. The deep desire or longing that's in his heart now is to see Him as he has done in the sanctuary in Jerusalem.

In verse 1 David tells God that he will seek Him early in the morning. Then comes the imagery of a dry or parched land where there's no water. The dry land stands for a spiritual desert. (As we know, water becomes invaluable in a desert or a dry land where it's scarce and can be obtained only at a high price).

Now in the wilderness, David's soul thirsts for God's presence and his body longs for his habit of attending worship in the sanctuary both of which he has been deprived of in the wilderness.

It's usually observed that the desire to possess something intensifies when one is denied access to it. Similarly, in the case of David, his yearning for God's presence and glory was intensified by his separation from the sanctuary where he had always felt God's abiding presence.

Children of God, how much do you desire to see God when you go to His sanctuary? David's deep desire was to see the power and glory of God and be enveloped in the divine presence in His sanctuary. Are you filled with a yearning to see Him as David was?

In Luke 19th chapter we read about Zachaeus, a man who had a keen desire to see Jesus. But, being a short man he couldn't because of the crowd. So, he ran ahead and climbed a sycamore tree to have a good look at Jesus as He was coming that way.

Believers, do you have such a desire to see the Lord? If you do, you'll never walk into the holy sanctuary in a casual manner. If you long to see Him, you'll never be late to the service; you'll never miss the worship which is a very important part of the service. If your heart is filled with a desire to see the power and glory of the Lord and feel His comforting presence, you'll never let anything distract your attention. Your eyes will be focused on Jesus and none but Him.

In Luke 4:16-20 we read that Jesus went to a synagogue at Nazareth where He was given the book of Prophet Isaiah to read. He finished reading the portion where the prophet had referred to Him and His glorious ministry, closed the book, gave it to the minister and sat down. Verse 20 says, "*...And the eyes of all them that were in the synagogue were fastened on him.*"

Why were the eyes of the people at the synagogue fixed on Jesus? Obviously, there was something in Him which attracted everyone's attention. What was it? Was it the radiance on His face? Or, was it the divine beauty that marked Him off from the rest of humanity? Any one who sees the incomparable beauty on the face of Jesus can never take his eyes off Him.

Believers should come to church with a yearning to see the beauty of Jesus. David was a king living in a palace. He was blessed with so much material prosperity that he could have spent all his time enjoying his wealth and the luxury of his kingly life. Yet, his heart was never on the material blessings God had given him. On the other hand, he had a craving for the glorious presence of God in His sanctuary. Be like David who had a longing to be in the sanctuary and have communion with God.

The desire to listen to the Word of God

"*Which was with the deputy of the country, Sergius Paulus, a prudent man; who called for Barnabas and Saul, and desired to hear the word of God*" (Acts 13:7).

It was the desire to listen to the Word of God that made Sergius Paulus send for Barnabas and Saul (Paul). The man was a proconsul (governor of a province in Rome)—a Roman officer holding a key position in the province; yet, he had a desire to hear the two Christians expound the Word of God. Here we see a Gentile having a good desire—the desire to listen to Barnabas and Paul and know what the Word of God had to say.

Usually, a thirst for the Word of God is seen in a new believer—one who has obtained salvation after repentance. He reads the Word of God avidly and attends all the services in the church. The sincere milk of the Word nourishes the soul and hence he desires it just as a new born babe cries for milk.

It's rather surprising that a Roman officer who wasn't born again should have a desire for the Word of God. If a Gentile could have a desire to listen to it, how much more should believers be filled with a desire to hear God speak through His infallible Word! Sadly, such an ardent desire is absent in some present - day believers.

It's said in Acts 17:11 that the believers in Berea were of more noble character than the Thessalonians because, they not only received the message of salvation with great eagerness, but they also searched and examined the Scriptures daily to know the truth about salvation which Paul preached.

The Word of God is so powerful that it can change those who read it with eagerness. Listen to what the writer of the letter to the Hebrews has to say:

"*For the Word that God speaks is alive and full of power* [making it active, operative,

energizing, and effective]; *it is sharper than any two-edged sword, penetrating to the dividing line of the breath of life* (soul) *and* (the immortal) *spirit, and of joints and marrow [of the deepest parts of our nature], exposing and sifting and analyzing and judging the very thoughts and purposes of the heart"* (Heb.4:12–Amplified Bible).

The verse quoted makes it very clear that any one who ***studies*** the Word of God will never be the same again. There will be a total transformation that will be noticed by everyone he moves with.

The Word of God is also referred to as the Word of grace. Apostle Paul told the elders at Ephesus that he commended them to God and to the Word of His grace which would build them up and give them an inheritance among all those who were sanctified (Acts 20:32). Therefore, it should be understood that without sanctification and without growing into *"a perfect man, to the measure of the stature of the fullness of Christ"*, you cannot hope to inherit the kingdom of God.

Apostle Peter rightly advises believers to rid themselves of all malice, all deceit, hypocrisy, envy and slander and, like new born babes, earnestly desire the pure spiritual milk of the Word of God (I Peter 2:2), so that they may grow spiritually strong.

If you delve deep into the Word of God with a passion in your heart to know the truth, it will not only help you to grow spiritually strong, it will also transform you into the image of Jesus Christ the Son of God.

The desire to see the saints of God face to face

"But since we were bereft of you, brethren, for a little while in person, (of course) not in heart, we endeavored the more eagerly and with great longing to see you face to face" (I Thess. 2:17–Amplified Bible).

It's true that many children of God have expressed their desire to see the face of God. But no one can see God's face and live, for, God Himself said to Moses, *"you cannot see my face, for no one may see me and live"* (Exodus 33:20–NIV). But He put Moses in a cleft of the rock, covered him with His hand till He passed by. Then He took His hand off and Moses was able to see only His back.

We read in Ps.27:8 the words of David: *"... my heart said unto thee: Thy face Lord will I seek."* While this desire ought to be in the heart of every believer, there should also be another desire which is mentioned by Paul the apostle in his first letter to the believers in Thessalonica. He has been away from them for a while and he tells them that although he has been physically separated from them, he is with them in the spirit. He adds that he has a deep desire to see them face to face. This desire to see the saints of God face to face which Paul had, you should also have. It reflects the true love for the saints of God who are also servants of God.

In Acts 20:37, 38 we learn how the believers in Ephesus who loved Apostle Paul very much were grieved when he told them that they would not see his face again. They wept throwing their arms around his neck and kissed him.

Here we find the emotions of the people who couldn't control their tears when Paul said that they wouldn't see his face any more. This speaks of the desire of the believers to see the face of a saint of God. The knowledge that they would see his face no more made the Ephesian believers weep.

Dear children of God, what is the desire of your heart today? Do you have the desire that king David had — to be in God's presence in His sanctuary? Do you have a deep desire to read the Word of God? Do you sincerely desire to see the saints of God face to face? If you lack any of them, ask the Lord to give you the desire of the righteous which is "only good".

ஊழியர் பகுதி

ஜெபவீரன் ஜான் ஹைடு

4. 1906 ஆம் ஆண்டின் மாநாடு— சிங்காசனத்தின்மேல் தேவ ஆட்டுக்குட்டி

ஆண்டவர் தொடர்ந்து அனுதினமும் அடியான் ஜான் ஹைடுவைச் சரீரத்திலும் ஆன்மீக ஜீவியத்திலும் பலப்படுத்தி ஊக்கமளித்து வந்தார். அவர் தம் ஜெப ஜீவியத்தில் அதிகமதிகமாக வளர்ச்சி பெற்றார்.

மக்களின் பாவமன்னிப்புக்காகவும், இரட்சிப்புக்காகவும் திருச்சபையின் மேல் சுமத்தப்பட்டுள்ள பணியின் பொறுப்பை அவர் அதிகமதிகமாக உணர்ந்தார். இரட்சகர் இயேசு கிறிஸ்து குடிக்கும் பாத்திரத்தில் குடிப்பதையும் அவர்பெறும் ஞானஸ்நானத்தில் தானும் பங்கு பெறுவதையுமே தம் குறிக்கோளாகக் கொண்டார்.

இவ்வுலகிலும் திருச்சபையாகிய உடலுக்கு, ஆவியானவராகிய கிறிஸ்துவே தலையாய் இருக்கிறார். இந்த மகிமை பொருந்திய கிறிஸ்துதாமே சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவ ஆட்டுக்குட்டியாகத் தம்மை, பக்தன் ஜான் ஹைடுவுக்கு அடிக்கடி தரிசனம்மூலம் வெளிப்படுத்தினார்.

இன்று தம் சரீரமாகிய இத்திருச்சபைக்காக சபா நாயகர் இயேசு கிறிஸ்து ஆவியில் அகோர வேதனைப்படுகிறார். இந்தச் சத்தியம் வேதாகமத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. சரீரமாகிய திருச்சபைக்கு இயேசு கிறிஸ்துவே ஜீவ நாடியாகவும், சபைக்கு அனலும், உயிரும் ஊட்டுபவராகவும் இருக்கிறார். இன்றும் பரலோகத்தில் அவர் நமக்காகப் பரிந்து பேசுபவராக இருக்கிறார்.

அப்படியாயின் இவ்வுலகின்கண் கிறிஸ்துவுக்காகப் பணிபுரிவதையே தங்கள் நோக்கமாக ஏற்றுக்கொண்டவர்கள் மக்களின் இரட்சிப்புக்காகக் கரிசனையுடன் பிரயாசையெடுக்கவும், நம் பரம பிதாவிடம் பரிந்து பேசவும், மன்றாட்டுகளை ஏறெடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதுவே கிறிஸ்துவின் சக பணியாளராகச் செயல்படுதல் என்பதன் பொருள்.

இன்றும் நமக்குப் பாவமன்னிப்பும் இரட்சிப்பும் உண்டாகவும், எல்லா மக்களுக்காகவும் நம் இரட்சகர் பரலோகத்தில் தம் பிதாவிடம் பெருமூச்சுடன் வேண்டுதல் செய்கிறார் என்பதை நாம் மறவாதிருப்போம். அவரின் இந்த ஒப்பற்ற குணாதிசயத்தையே ஜான் ஹைடு தனக்கு முன் மாதிரியாகக்கொண்டார்.

அடிக்கடி அவர் இப்பூலோக மக்களுக்காகவும், குறிப்பாக, இரட்சகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஆண்டவரின் பிள்ளைகளுக்காகவும் தம் கண்களில் கண்ணீர் மல்க ஜெபித்தார். கிறிஸ்து தாம் காட்டிக் கொடுக்கப்படுவதற்கு முந்தின இரவு கடைசி முறையாகத் தம் சீஷர்களுடன் பேசிய வார்த்தைகளை நாம் நினைவுகூருவோம்.

"நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்" (யோவான் 16:20).

அவர் தம் அடியார்களுக்கு அருளிய வாக்குத்தத்தம் இதுவாகும். அவர்களின் கண்ணீர் வெற்றி கோஷமாகவும், ஆனந்த துதிப்பாடலாகவும் மாறும். பக்தன் ஜான் ஹைடு இதை உறுதியாக நம்பினார்.

1906 ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாம் மாநாட்டில் ஆண்டவர் ஜான் ஹைடு உட்பட, பல இறைமக்களின் வேண்டுதல்களுக்கும், மன்றாட்டுகளுக்கும் செவி கொடுத்தார். ஆயிரக்கணக்கான தம் பிள்ளைகளின்மீது கிருபையின் பிரவாகத்தையும், பரிசுத்த ஆவியையும் ஊற்றினது மட்டுமன்றி, அவர்களுக்குத் தேவசமுகத்தில் பிறருக்காகப் பரிந்து பேசும் வரத்தையும் கொடுத்தார் என்பதும் தெளிவாகக் காணப்பட்டது எனலாம்.

இதற்கு எடுத்துக்காட்டாக அங்கே கூடியிருந்த மக்கள் மத்தியில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறலாம். இந்தச் சபை கூடுதலில் கலந்துகொள்ள ஓர் இந்தியக் கிறிஸ்தவப் பெண் வந்திருந்தாள். அவளுடைய தந்தை தன் மகளின் விசுவாச ஜீவியத்துக்குப் பெரிய இடையூறாக இருந்து அவளை அதிகம் துன்புறுத்தி வந்தார்.

அவள் சியால்கோட் நகர் சபை கூடுதலில் கலந்துகொண்டு, ஜெப அறையில் ஆண்டவர் சமுகத்தில் தன் இருதய சிந்தனைகளை வெளிப்படுத்தி, கிறிஸ்துவின் அருளுக்காகவும் மன சமாதானத்துக்காகவும் ஜெபித்தாள். அப்பொழுது ஆண்டவர் அவள் உள்ளத்தில் பேசி, அவளுடைய பாவங்களையும் குறைபாடுகளையும் எடுத்துக்காட்டியதை அவள் உணர்ந்தாள். மிகுந்த மனஸ்தாபத்துடன் மன்றாடி, புதிய தீர்மானம் செய்தவளாய்த் தன்னை முற்றிலும் இரட்சகர் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தாள்.

அதோடு இரட்சிப்பை அறியாத தன் தந்தைமீது அன்பும், கரிசனையும் மிக்கவளாய் அவருக்காக மிகுந்த பாரத்துடன் ஜெபித்தாள். கூடியிருந்த இறை

மக்கள் அனைவரையும் தன்னுடன் சேர்ந்து தன் தந்தைக்காக வேண்டுதல் செய்யும்படி வேண்டினாள். அப்போதுதானே தூய ஆவியானவர் வல்லமையாகக் கிரியை செய்தார். மாபெரும் அமைதி ஏற்பட்டது. கூடியிருந்த அனைவரும் ஏகோபித்து அந்த ஓர் ஆத்துமாவுக்காகக் கண்ணீருடன் இறைவனிடம் பரிந்துபேசி விண்ணப்பித்தனர்.

அவர்கள் அப்பெண்ணின் தந்தையை அறியாதவர்கள்; அவரை ஒருபோதும் அவர்கள் பார்த்ததோ, அவரைப்பற்றி எதுவும் அறிந்தவரோ அல்லர். ஆனாலும் அந்த ஒருவருக்காக அன்று அவர்கள் தங்கள் ஜெபத்திலும் மன்றாட்டிலும் காட்டிய அன்பும், ஆர்வமும், ஏக்கமும், இறை மக்களாகிய நாம் பிறருக்காகவும், நாம் அறியாத மக்களுக்காகவும் எவ்வளவு ஆன்மீகத்தாகமும் பொறுப்பும் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதற்கு இது ஒரு சிறப்பான எடுத்துக்காட்டாகக் காணப்பட்டது.

அந்த ஜெப அறையில் கூடியிருந்த மக்களில் தூய ஆவியானவரின் கிரியையினால் அசைவு பெறாதவர், கண்ணீர் விடாதவர் எவருமில்லை. அது மாத்திரமல்ல, அவர்கள் அனைவரும் தங்கள் மன்றாட்டுகளும், விண்ணப்பங்களும் ஆண்டவரால் கேட்கப்பட்டன என்ற நிச்சயத்தையும் உணர்ந்தார்கள். பிதாவுடன் பேசி உறவாடும் கெத்செமனே அனுபவம் பெற்ற அவர்கள் பெந்தெகொஸ்தே மகிழ்ச்சியுடன் தேவனை நன்றிப் பெருக்கோடு துதித்தனர்.

"இந்த ஜெப ஐக்கியம் என் இருதயத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. இந்த மகிழ்ச்சியும் பரவசமும் நிறைந்த அனுபவத்தை, என்றும் என்னால் மறக்க முடியாது" என்று அன்றைக்கு அங்கே பிரசன்னமாய் இருந்த சகோதர மிஷனெரி ஒருவர் எழுதியிருக்கிறார்.

இரட்சகர் இயேசு கிறிஸ்து நமக்குக் கிருபையாய் இலவசமாய் அளிக்கும் பாவமன்னிப்பையும், இரட்சிப்பையும் பெற்றுக்கொண்டபின் பிற மக்களையும் இந்தப் புதிய அனுபவத்துக்குள் கொண்டு வரும் பாரத்தையும் பொறுப்பையும் சுமக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

இவ்விதமான நம்மிலுள்ள, ஆத்துமாக்களை ஆதாயம் செய்யவேண்டும் என்ற ஆர்வமும் தாகமுமே ஆவியானவர் நம் உள்ளங்களில் கிரியை செய்கிறார் என்பதற்கும் நாம் ஆவியின் பிரகாரமான ஜீவன் பெற்றிருக்கிறோம் என்பதற்கும் அத்தாட்சியாகும்.

இந்தச் சத்தியத்தை அன்று சியால்கோட் நகரில் திருச்சபையாகக் கூடின இறைமக்கள் நன்கு கண்டனர். இக்காலத்தில் வாழும் நாமும் இந்த உண்மையை அறிந்து உணர்ந்து கிறிஸ்துவுக்காகச் செயல்படுவோம். இன்னும் அறியாமையிலும், அஞ்ஞானத்திலும் அமிழ்ந்திருக்கும் இலட்சக்கணக்கான மக்கள் நம்மூலமாக கிறிஸ்துவண்டை இழுக்கப்பட வேண்டுமாயின் நாம் அவருடன் கெத்செமனே அனுபவத்துள் பிரவேசித்தாகவேண்டும்.

நாம் அவ்விதம் பிரவேசிப்பதை அவர் விரும்புகிறார். இப்படி அவருடைய பாடுகளில் நாம் ஓரளவு பங்குபெறுவது கிடைத்தற்கரிய, ஆசீர்வாதம் நிரம்பிய ஓர் அனுபவமாகும். இந்த கெத்செமனே அனுபவத்தின்மூலம் நாம் தேவகுமாரனுடன் வெகு நெருக்கமாக ஐக்கியம் பெற்று உறவாடுகிறோம். இவ்விதமாகவே காணாமற்போன ஆடுகளாகிய மக்களைத் திரும்பத் தம் மந்தையில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்பது ஆண்டவரின் அநாதி தீர்மானமாகும்.

"நமது காரியமாய் யார் போவான்? நான் யாரை அனுப்புவேன்?" என்பதே இன்றும் அவருடைய கேள்விகள். நாம் அகில உலக மக்களுக்காகவும், நம்மைச் சுற்றிலும் வாழ்கிற அயலாருக்காகவும் நம் எஜமான் இயேசு கிறிஸ்துவிடம் பரிந்து பேச மனதுள்ளவர்களாய் இருக்கிறோமா? இந்த விருப்பம் நம்மில் இருக்குமானால் நிச்சயமாகவே அவர் நம்மை உபயோகிக்க விரும்புவார்.

ஆனால் அவர் நம்மை உபயோகிப்பதற்கு ஏதுவாக அவருடைய இரண்டு நிபந்தனைகளை நாம் ஏற்றுக்கொண்டு, அவற்றை நம் அனுதின வாழ்க்கையில் அனுசரித்தாக வேண்டும். முதலாவது, நாம் அவருக்குப் பரிபூரணமாகக் கீழ்ப்படிதல், இரண்டாவது, நம் இருதயத்தின் தூய்மை. இவையிரண்டும் ஒன்றையொன்று தழுவிய பண்புகளாகும்.

கீழ்ப்படிதல் என்றால் நம் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும், எல்லாக் காரியங்களிலும், அற்பமானவை என்று நாம் சாதாரணமாய் நினைப்பவை உட்பட எல்லாவற்றிலும் நம் சுய விருப்பத்தை விட்டுக் கொடுத்து, ஆண்டவரின் சித்தத்தை ஏற்றுக்கொள்ளுதலாகும். இரண்டாவதான இன்றியமையாத தேவை, நம்மில் இருக்கவேண்டிய தூய்மையான இருதயம். சுத்தமான பாண்டங்களையே ஆண்டவர் தம் திருப்பணியில் உபயோகிக்க விரும்புகிறார். நம்மில் பரிசுத்தம் இல்லாவிடில் அவருடைய கிருபையும் வல்லமையும் நம்மில் பிரவேசித்து, நம்மூலமாகக் கிரியை செய்தல் என்பது அசாத்தியம்.

புறத்தோற்றத்தில் மாத்திரமல்ல, நம் உள்ளிந்திரியங்களிலும், நம் அந்தரங்கத்திலும் தூய்மையை

அவர் விரும்புகிறார். பரிசுத்த ஆவியின் அன்பால் புடமிடப்பட்டு தூய்மைபெற்ற உள்ளங்களே திருச்சபை நாயகர் இயேசு கிறிஸ்துவுக்குத் தேவை. அவர்கள் மூலமாகவே அவர் தம்மை இதுவரை அறிந்திராத உள்ளங்களை அசைத்து, குரல் கொடுத்து அழைத்து, தம்முடைய ஒளிக்குள் அவர்களைப் பிரவேசிக்கச் செய்வதாகிய அற்புதத்தை நிகழ்த்த முடியும்.

இவ்விதமான கறை, திரையற்ற பரிசுத்தத்தை நாம் அவருடைய கரங்களிலிருந்தே பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம். நாம் அதிக குறையுள்ளவர்கள். சுயமாக நம்மில் தூய்மை கிடையாது. பாவக்கறை பிடித்த நம் சரீரங்களையும் உள்ளங்களையும் நாம் பூரணமாக அவருடைய கரங்களில் சமர்ப்பித்து, நம் வாழ்க்கையனைத்திலும் அவர் பிரவேசிக்க அனுமதிப்போமானால் நிச்சயமாகவே நாம் சுத்திகரிக்கப்படுவோம். இயேசு கிறிஸ்து தம் திருப்பணியில் உபயோகிக்கும் தகுதி பெற்றவர்களாக நாம் மாறுவோம். இத்தகைய பக்குவம் பெற்ற பணியாட்களுக்காக ஏங்கி, தாம் நேசிக்கும் திருச்சபையைக் கண்ணோக்கி நிற்கிறார் நம் ஆண்டவர்.

(தொடரும்)

வேத பாடம்

சாலொமோனின் உன்னதப்பாட்டு

(தொடர்ச்சி)

பாடம் 4

உன்னதப்பாட்டு 1:8-10

"ஸ்திரீகளில் ரூபவதியே!" (உன்.1:8).

ஆம், அவள் ரூபவதிதான்! 'சூலமித்தி' என்ற சொல்லின் பொருள், "முழுமை", "பூரணம்", "சமாதானம்" என்பதாகும். *"சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்"* (கொலோ.2:10). *"நீங்கள் தேவனுக்குச் சித்தமான வைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் ..."* (கொலோ.4:12).

சபையாகிய கன்னிகை ஆவிக்குரிய வாழ்க்கையில் பரிசுத்தமும் பூரணமுமாய்க் காணப்படவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டவே, *'ரூபவதியே!'* என்றார் மணவாளன். இதுவரை, சூலமித்தி தனது மணவாளனைக் கவர்ச்சி நாயகனாகக் கண்டாள். இப்போதோ மணவாளன் அவளால் கவரப்பட்டு, *"ஸ்திரீகளில் ரூபவதியே!"* என்றார். காரணம் என்ன? சூலமித்தி தனது மணவாளனை, *"என் ஆத்தும நேசரே,"* என்று புகழ்ந்து போற்றினமையே. மணவாட்டியின் புகழ்ச்சியை—உள்ளழகை—தனித்தன்மையை—மணவாளன் கண்டு இன்புற்றதினால் அவளை, *"ரூபவதி"* என அழைத்தார்.

ஆம், இன்றுங்கூட சபையாகிய மணவாட்டி தேவனைப் புகழ்ந்து, போற்றி, துதித்தல்வேண்டும். அப்போதுதான் மணவாளனாம் இயேசு கிறிஸ்துவால் சபை, "ரூபவதி" என்று அழைக்கப்படும்.

"அதை நீ அறியாயாகில்" (உன்.1:8).

மணவாளனது இந்தச் சொற்கள் சூலமித்திக்கு ஏற்பட்ட நிந்தையின் சொற்களாகும். எவ்வாறு? "நீ அறிந்திருக்கவேண்டிய தொழுவமாகிய இடத்தை அறியவில்லை" என்று அவளது குறையை இங்குச் சுட்டிக்காட்டினார் மணவாளன். ஆம், அவள் தான் மேய்ச்சலைக் கண்டடைய வேண்டிய இடத்தை விட்டுவிட்டு, பிறர் கட்டளையிடும் வேலைக்கு முக்கியத்துவம் கொடுத்து, இளைப்பாற எண்ணினாள். இந்நாட்களில் சத்தியத்திற்காக நிற்கவேண்டிய சபையாகிய கன்னிகை செய்யும் தவறும் இதுவே. சபையே! உனக்குரிய தொழுவத்தை நீ அறிந்துகொள்.

"மந்தையின் காலடிகளைத் தொடர்ந்துபோய்" (உன்.1:8).

'காலடிகள்' என்பது என்ன? கர்த்தருடைய வசனங்களின்படி நடப்பவர்களையும், விசுவாசத்தில் உறுதியாய் நிற்கிற தேவ பிள்ளைகளின் வாழ்க்கையையும் இது சுட்டிக்காட்டுகின்றது.

பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காகத் தைரியமாய்ப் போராடுகிற கர்த்தருடைய பிள்ளைகள் இன்றும் இருக்கின்றனர் (யூதா 1:3). அவர்களது காலடிகளைச் சபை பின்தொடர்ந்து செல்லவேண்டும்.

"சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் நாயகர்; நான் உங்களை ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டு பேருமாய்த் தெரிந்து, உங்களைச் சீயோனுக்கு அழைத்துக்கொண்டுவந்து,

உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன், அவர்கள் உங்களை அறிவோ

டும் புத்தியோடும் மேய்ப்பார்கள்" (எரேமியா 3:14,15).

கர்த்தர் சபையை எதற்காகத் தெரிந்துகொண்டார்? அறிவோடும் புத்தியோடும் மேய்க்கும் மேய்ப்பர்களோடு இணைந்து வாழவே. ஆனால், இன்றைய சபை மணவாளனோடு இணைந்து காணப்படும் மந்தையை அல்லத்தட்டுகின்றன. சத்தியத்திற்காகவும், விசுவாசத்திற்காகவும் தைரியமாய்ப் போராடுகிற மக்களைப் பின்தொடர்ந்து அவர்களோடு ஐக்கியப்பட்டு, மணவாட்டியாகிய சபை வாழவேண்டும். **"நான் கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கப்பட்டுள்ளேன்" என்ற உணர்வு சபையின் ஒவ்வொரு விசுவாசிக்கும் அவசியம்.**

அடுத்து, *'காலடிகள்'* என்ற சொல் எதைக் குறிக்கும்? இவ்வுலக வாழ்வின் பரிசுத்தத்தில் முழு திருப்தியான ஆகாரத்தைப் புசித்து, இளைப்பாறி, பரலோகத்திற்குக் கடந்து சென்ற பரிசுத்தவான்களின் காலடிகளைக் குறிக்கும். சார்லஸ்ஃபின்னி, ஜார்ஜ் முல்லர், ஜான் வெஸ்லி, மார்ட்டின் லூத்தர் போன்ற பரிசுத்தவான்களின் காலடிகளைச் சபை பின்தொடர வேண்டும். ஜெபவீரன் ஹைடு என்பவரது இருதயம் அவரது ஜெபவாழ்க்கையினால், அது இருக்கவேண்டிய இடத்தைவிட்டு நகர்ந்து சென்றது என்று வரலாறு கூறுகின்றது.

சபையே! மணவாட்டியே! இப்பரிசுத்தவான்கள் தங்களது ஆவிக்குரிய ஆகாரத்தை எவ்வாறு முழு திருப்தியோடு பெற்று வாழ்ந்தனர்? இவைகளை ஆராய்ந்து, அன்னாரது காலடிகளைத் தொடர்ந்து செல்வாயாக. இதுவே சபையின் கடமை. அப்போது, சபையாகிய மணவாட்டி இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

"மேய்ப்பர்களுடைய கூடாரங்களண்டையில் உன் ஆட்டுக்குட்டிகளை மேயவிடு" (உன்.1:8).

இங்கு, 'ஆடுகள்' என்று கூறப்படாமல், *'ஆட்டுக்குட்டிகள்'* என்று கூறப்பட்டமை காண்க. இச்சொல் மந்தையைக் குறிக்கும் சொல்லல்ல. ஏனெனில், மணவாட்டி இன்னும் ஆவிக்குள் வளரவில்லை; தேர்ச்சிபெறவில்லை. மந்தையையும் மேய்ச்சலையும் சரியான முறையில் மணவாட்டி இன்னும் அநுபவிக்கவில்லை.

இந்த, *'ஆட்டுக்குட்டிகள்'* சபையாகிய மணவாட்டியின் கரத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டவை. சபைக்கு—தனிப்பட்ட விசுவாசிகளுக்கு—உத்தரவாதமான ஓர் ஊழியமுண்டு. விசுவாசிகள் தங்களது ஆவிக்குரிய அநுபவத்தால், பல ஆத்துமாக்களை இயேசு மணவாளனண்டை நடத்தியிருக்கக்கூடும்.

தனது கரங்களில் ஒப்புவிக்கப்பட்ட ஆத்துமாக்களைச் சபை, மேய்ப்பர்களுடைய கூடாரங்களண்டைக்கு அழைத்துச்சென்று, போஷிக்கவேண்டியது அதன் கடமை. *'கூடாரங்களண்டையில்'* என்றுள்ள பன்மையின் சொல்லை இங்குக் கவனிக்கவும். இதன் பொருள் என்ன?

நமது நல்ல மேய்ப்பரும் பிரதான மேய்ப்பரும் யார்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே. அவருக்குக் கீழ் இவ்வுலகில் உதவி மேய்ப்பர்கள் அநேகரைத் தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். இவ்வுலகில் காணும் சபைகளின் போதகர்கள் அனைவரும் துணை மேய்ப்பர்கள் ஆவர். அதாவது, **கூடாரங்களையுடைய சபையின் போதகர்கள்.**

பிரதான மேய்ப்பரான இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அவரது போதனையின்படி, இந்தத் துணைமேய்ப்பர்கள் சபையாகிய கன்னிகையை நடத்தவேண்டும். சபை தனது கரங்களில் ஒப்புக்கொடுக்கப்பட்ட, அநுபவத்தில் குறைந்த ஆத்துமாக்களை (ஆட்டுக்குட்டிகளை) பிரதான மேய்ப்பரின் ஆலோசனையின்படி நடத்தும் மேய்ப்பர்களண்டையில்தான் கொண்டுசெல்லவேண்டும். இதனையே *'மேய்ப்பர்களுடைய கூடாரங்களண்டையில்'* என்ற சொற்றொடர் சுட்டிக்காட்டுகின்றது.

மணவாட்டியாகிய சபை—கன்னிகை—அப்போதுதான், தான் ஏங்கி நிற்கும் ஆகாரத்தையும் இளைப்பாறுதலையும் பெற்று அநுபவிப்பாள். தனது கரத்தில் ஒப்புவிக்கப்பட்ட ஆத்துமாக்களைக் குறித்துக் கவலையீனமாய் இருக்கும் சபைக்கு திருப்தி, இளைப்பாறுதல் கிடைக்காது.

"என் பிரியமே" (உன்.1:9).

இங்கு மணவாளன் மணவாட்டியை, *'என் பிரியமே'* என்று கூப்பிடுவது மெச்சத்தகுந்தது. வேதாகம மற்றொருமொழிபெயர்ப்பு, *"எனக்குப் பிரியமான சிநேகிதியே"* என்று கூறுகிறது; ஆம், இயேசு கிறிஸ்துவுக்குச் சபை ஒரு பிரியமான சிநேகிதிதான். மணவாட்டியாகிய சபைக்கும் இயேசு கிறிஸ்து ஓர் ஆத்ம நண்பனே.

"பார்வோனுடைய இரதங்களில் பூண்டிருக்கிற பரிகள் பவுஞ்சுக்கு உன்னை ஒப்பிடுகிறேன்" (உன்.1:9).

'பரி' என்பது குதிரையைக் குறிக்கும் சொல்லாகும். சாலொமோன் (இயேசு) தம் மணவாட்டியை—

சபையை—பார்வோனுடைய இரதங்களில் பூட்டப் பட்டிருக்கும் மேன்மையான குதிரைகளின் கூட்டத் திற்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். அவர் தமது இரதத் திற்கு எகிப்திலிருந்து கொண்டுவரப்பட்ட குதிரைக ளையே பயன்படுத்தினார்.

"சாலொமோன் தனக்குக் குதிரைகளையும் புடவைகளையும் எகிப்திலிருந்து அழைப்பித்தான்; ..." (1 இராஜா.10:28).

எகிப்திய குதிரைகள் வீரியத்திற்குப் பெயர்போ னவை. அவைகள் மேன்மையான, திறன்வாய்ந்த, அழகும் சுத்தமுமான குதிரைகள் ஆகும். இவ்வித குதிரைகளையே பார்வோன் தனது இரதத்திற்குப் பயன்படுத்திவந்தான். இக்குதிரைகள் ஒன்று சேர்ந்து, அடங்கி, கீழ்ப்படிந்து ஓடுவதற்குப் பயிற்சிக்கப்பட் டவை. இராஜா எவ்விடம் செல்லவிரும்புகிறாரோ, அவ்விடத்திற்குமட்டும் அக்குதிரைகள் செல்லும்.

கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையும் இது போலவே, அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, அடங்கி நடத்தல்வேண்டும் என்பதை இக்குதிரை கள் நமக்குப் போதிக்கின்றன. மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் இரதங்களின் கூட்டத்துக்கு அல்ல, *'பரி கள் பவுஞ்சுக்கே'* மணவாட்டி ஒப்பிடப்பட்டுள்ளாள்.

"அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையான வர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமான வர்" (கொலோ.1:18).

குதிரைகளின் கூட்டம் என்பது தலையாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் அமைந்துள்ள அவயவங்க ளான சபை விசுவாசிகளுக்கு ஒப்பானவை. குதிரை கள் எவ்வாறு இரதத்தை ஒருங்கிணைந்து இழுத்துச் செல்லுகின்றனவோ, அவ்விதமே விசுவாசிகளும் சபையில் இணைந்து செயல்படவேண்டும். மட்டு மன்றி, தலையாகிய கிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டு, அவரது சித்தத்துக்குள் அடங்கி, வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதையும் இவை நமக்குப் புகட்டு கின்றன.

"இதோ, மேகங்களைப்போல எழும்பிவருகி றான்; அவனுடைய இரதங்கள் பெருங்காற்றைப் போலிருக்கிறது; அவன் குதிரைகள் கழுகுகளிலும் வேகமானவைகள்; ..." (எரே.4:13).

'குதிரைகள் கழுகுகளிலும் வேகமானவைகள்' என்றுள்ள சொற்களை இங்குக் காண்க. ஆம், பார் வோனின் இரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகள் மிக வேகமாகச் செல்லக்கூடியவை. *"என்னை இழுத்துக் கொள்ளும், உமக்குப் பின்னே ஓடிவருவோம்"* (உன்.1:4) என்று மணவாட்டி கூறியுள்ளதை முன் னரே கண்டோம். மணவாட்டியாகிய சபை கிறிஸ்து வுக்குப் பின்னாக, குதிரைகளைப்போல ஓடிச்செல் லவே அழைக்கப்பட்டுள்ளாள் என்பதை இச்சொற் கள் நமக்கு வலியுறுத்துகின்றன.

பூமியின் நான்கு திசைகளிலும் கர்த்தருடைய பிள்ளைகள் வேகமாகச் சென்று சுவிசேஷச் செய் தியைப் பரப்புமாறு அழைக்கப்பட்டுள்ளனர். சபை மக்கள் வீணான சொற்களைப் பேசி, தங்களது நேரத் தைப் பயனற்ற முறையில் செலவிடாது, காலத்தை ஆதாயப்படுத்தி, துரிதமாய் ஓடி, சுவிசேஷப்பணியை உற்சாகமாய்ச் செய்தல்வேண்டும். தற்கால சபை, செயல் இழந்த குதிரைகளாகக் காணப்படுவது வருந்தத்தக்கதே.

"அது கலங்காமலும், பட்டயத்துக்குப் பின் வாங்காமலுமிருந்து, பயப்படுதலை அலட்சியம் பண்ணும்" (யோபு 39:22).

யோபு 39:19 முதல் 22 வரையுள்ள வசனங்க ளில் குதிரையின் தன்மைகளைக் காண்கிறோம். குதிரைகளின் பயமற்ற தன்மையை இங்கு நாம் நன்கு அறிகிறோம். எதிரிகளைக் கண்டு போர்க்குதி ரைகள் பயப்படாது, பின்வாங்காது முன்னேறிச் செல்லுபவை. மணவாட்டி சபையும் தேவனுடைய இராஜ்ஜியத்தின் பரம்புதலை எதிர்க்கும் சக்தி களைக் கண்டு பயப்படக்கூடாது. பிசாசின் கிரியை களைக் கண்டும், அவனது பயமுறுத்தல்களைக் கண்டும் கலங்கக்கூடாது. தைரியமாக, சூழ்நிலை களை எதிர்த்து முன்னேறவேண்டும்.

பார்வோனது குதிரைகள் அவனது இரதத்தை, ஒருங்கிணைந்து, ஒரே திசையை நோக்கி, வேகமாக இழுத்துச் செல்பவை. இன்றைய மணவாட்டியாகிய சபையை, பார்வோனது இரதத்தின் குதிரைகளின் கூட்டத்துக்கு ஒப்பிடமுடியவில்லை. காரணம், சபைக்குள் ஒருமனம், ஐக்கியம் இல்லை.

அன்பானவர்களே! இன்னும் சுவிசேஷச் செய்தி உலகில் முற்றுமாகப் பறைசாற்றப்படவில்லை. கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை ஒருங் கிணைந்து, ஒரே மனதோடு தீவிரமாய்ச் செயல்பட முற்படவேண்டும். பெலவீனமான, சத்துவமற்ற குதிரையைப்போலச் சபை செயல்படக்கூடாது.

"ஆபரணாதிகள் பூண்ட உன் கன்னங்களும், ஆரங்கள் பூண்ட உன் கழுத்தும் அழகாயிருக்கிறது" (உன்.1:10).

"உன் கன்னங்கள்" (உன்.1:10).

பொதுவாக, கன்னங்கள், மணவாட்டியின் அழகை மேம்படுத்திச் சிறப்பித்துக்காட்டுகின்றன. *'ஆபரணாதிகள்'*, *'ஆரங்கள்'* என்பவை உலக அலங்காரங்கள் ஆகும். சபையாகிய மணவாட்டிக்கோ ஆவிக்குரிய அலங்காரமே அவசியம்.

"மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல்,

அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" (1 பேதுரு 3:3,4).

இருதயத்தில் மறைந்திருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியின், அழகே சபையாகிய மணவாட்டிக்குத் தேவை. இதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.

"அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய் ..." (1 கொரி.1:7). கொரிந்து சபையானது எந்த வரத்திலும் குறைவுபட்டுக் காணப்படவில்லை. அதாவது சபை—மணவாட்டி—**ஆவியின் கனியால் நிறைந்து காணப்பட வேண்டும் என்பதையும் கன்னங்கள் சுட்டிக்காட்டு கின்றன.**

*"நன்மையான எந்த ஈவும் **பூரணமான எந்த** வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை"* (யாக்கோபு 1:17).

இங்கு, *'பூரணமான எந்த வரமும்'* என்ற சொற்கள் நற்குணத்திலும் வரங்களிலும் ஆவிக்குரிய கனியிலும் நிறைந்திருத்தலையே தெளிவுபடுத்துகின்றது. ஆம், **மணவாட்டி நற்குணங்களாலும் வரங்களாலும் ஆவிக்குரிய கனியினாலும் தன்னை அலங்கரிக்கவேண்டும்.**

மட்டுமன்றி *'கன்னங்கள்'* **மணவாட்டியின் ஜீவனையும் ஆரோக்கியத்தையும்** குறிப்பவை. பொதுவாக, மனிதனுடைய ஆரோக்கியம் அவனது கன்னங்களைக் கொண்டே கணிக்கப்படுவது இயல்பு. மணவாட்டியின் ஆவிக்குரிய அழகும், ஜீவியமும் மறைந்திருக்கமுடியாது. **கர்த்தருடைய மகிமையையும், பிரகாசத்தையும் மணவாட்டியின் கன்னங்கள் வெளிப்படுத்தவேண்டும்.**

அருமையான சபையே! விசுவாசிகளே! உங்களது முகத்தில் **தேவனது மகிமையும், பிரகாசமும் காணப்படுகின்றதா?** ஆராயவும்.

கன்னங்களின் ஆரோக்கியத்தை மூன்று விதங்களில் கண்டறியலாம். அவை: **தேவனோடு நடக்கும் வாழ்க்கை; தேவனுக்கு முன்பாக நடக்கும் வாழ்க்கை; தேவனைப் பின்தொடர்ந்து நடக்கும் வாழ்க்கை** என்பனவாகும். இவற்றை வேதாகமப் புருஷர்களின் வாயிலாக அறியலாம்.

*"ஏனோக்கு **தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில்,** காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்"* (ஆதி.5:24).

தேவனோடு நடக்கும் வாழ்க்கைக்கு ஏனோக்கின் ஜீவியம் ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

*"ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதான போது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு **முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு**"* (ஆதி.17:1).

இவ்வசனத்தின்படி ஆபிரகாம் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நடந்து, தேவனைப் பிரியப்படுத்தினான் என்பது, தெளிவு.

*"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, **அவரைப் பற்றிக்கொள்வீர்களாக**"* (உபாகமம் 13:4).

இங்கு, தேவனைப் பின்பற்றி நடக்கும்படியாய் மோசே இஸ்ரவேலருக்குக் கட்டளையிட்டதைக் காண்கிறோம். ஆம், மணவாட்டி—சபை—தேவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவரது அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து நடக்கவேண்டும். அப்போது தான் **மணவாளனாம் இயேசு கிறிஸ்து மணவாட்டியின் அழகில் மூழ்கி, சபையைப் புகழ்ந்து பாராட்ட முடியும்.**

"உன் கழுத்து" (உன்.1:10).

கழுத்து தலையையும், சரீரத்தையும் இணைக்கும் ஓர் உறுப்பு ஆகும். கழுத்தில்லாத ஒரு சரீரம் எப்படி இருக்கும்? கற்பனைசெய்து பார்ப்பீர்களாக. சரீரம் எப்போதும் தலைக்குக் கீழ்ப்பட்டிருத்தல் வேண்டும் என்பதற்காகவே அது, தலைக்குக் கீழே உருவாக்கப்பட்டுள்ளது.

அதாவது, சபையானது தலையாகிய இயேசுவின் கற்பனைகளுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்ப்பட்டு, அடங்கி நடத்தல்வேண்டும் என்பதாம். இதுவே சபையாகிய மணவாட்டியின் உண்மை அழகுமாகும். சபை கிறிஸ்துவின் அன்பில் நிறைந்து, அவரோடு இசைந்து, இணக்கமாக வாழ்தல்வேண்டும். அப்போதுதான் மணவாளனாம் இயேசு தமது சரீரமாகிய சபையை நோக்கி, "*ஆபரணாதிகள் பூண்ட உன் கன்னங்களும் ஆரங்கள் பூண்ட உன் கழுத்தும் அழகாயிருக்கிறது*" என்று மகிழ்ந்து களிகூருவார்.

அருமை சபையே! விசுவாசிகளே! மணவாளனாம் இயேசுவால் பாராட்டப்படும் ஒரு வாழ்க்கையை வாழ முற்படுங்கள். கர்த்தர்தாமே உங்களுக்கு வேண்டிய கிருபைகளைத் தந்தருளுவாராக.

(தொடரும்)

பெண்கள் பகுதி

ஒரு கைதி என்றாலும்

(கிறிஸ்துவுக்காகப் பாடுகள் சகித்த காரி டென் பூம் அம்மையாரின் சரிதம்)

முகவுரை

நாசி ஆதிக்கம் ஐரோப்பா கண்டம் முழுவதும் தலை விரித்து ஆடி, எங்கும் அழிவை உண்டுபண்ணிக்கொண்டிருக்கும்போது, ஹாலந்து தேசத்திலே ஒரு சிறிய ஊரிலே கடிகாரம் செப்பனிடும் ஒருவரும், அவர் குடும்பமும் கிறிஸ்துவுக்காக எதையும் பொருட்படுத்தாமல், அவர் அன்பை நடைமுறையில் காண்பித்து வந்தது. அந்தக் குடும்பமே காரி டென் பூம் குடும்பம். இவர் தகப்பனாரே கடிகாரம் செப்பனிடுபவர்.

இக்குடும்பம் உபத்திரவப்படும் யூதருக்கு ஓர் அடைக்கலப் பட்டணம்போல் இருந்தது. அநேக யூதர்கள் இவ்வீட்டில் அடிக்கடி அடைக்கலம் புகுவர். நாசி ஆட்சியினர் திட்டமிட்டு இக்குடும்பத்தைச் சிறைப்படுத்தினர்.

காரி டென் பூம் தன் தந்தையையும் சகோதரியையும் சிறைச்சாலையில் இழக்கக் கொடுத்தார். இவர்களின் சடலத்தைப் பார்க்கவும் அவர் அனுமதிக்கப்படவில்லை. தனிமை, வியாதி, சோர்வு, சித்திரவதை முதலியவைகளுக்கு உள்ளான காரி டென் பூம் திடீரென்று விடுவிக்கப்பட்டார்.

கிறிஸ்துவுக்காகப் பாடுபட்ட தன்னுடைய அனுபவத்தை அம்மையாரே ஆங்கிலத்தில் புத்தக வடிவில் எழுதியுள்ளார். இதன் தமிழாக்கம் திரு.டி. கோயில் பிள்ளை (எம்.ஏ. பி.ஓ.எல்) அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இதனை, தொடர்ந்து வருகிற மாதங்களில் கற்று அறிவோமாக.

இப்புத்தகத்தில் கண்டுள்ள முதல் இரண்டு அத்தியாயங்கள், காரி டென் பூம் அம்மையாரின் ஆங்கில நூலில் கொடுக்கப்படவில்லை. ஆனால், இவ்விரண்டு அத்தியாயங்களை வாசித்தறிந்தால் தான், அம்மையாரின் பாடுகளின் இரகசியம் நமக்கு நன்கு விளங்கும் என்ற கருத்துடன், முதல் இரண்டு அத்தியாயங்களை இப்புத்தகத்தில், தமிழ் மக்களின் பிரயோஜனத்திற்காகச் சேர்த்துள்ளோம்.

காரி டென் பூம் அம்மையார் சிறையிலிருந்து வெளிவந்து, பல ஆண்டுகள் பலருக்குத் தொண்டு செய்து, முதிர்வயதில் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் கடவுள் பாதம் அடைந்தார். அவர் வாழ்க்கை சரிதம் நிழல்படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது.

1. யூதர்கள் வழியாகவே உலகுக்கு இரட்சிப்பு

மனிதன் தன் உள்ளத்தையே சரிப்படுத்த முடியாது தத்தளிக்குங்கால், அவன் உலகத்தை எங்கே இரட்சிக்கப்போகிறான்? மனிதனால் இது கூடாது; ஒருக்காலும் கூடவே கூடாது. ஆனால் கடவுளால் இது கூடும். கடவுள் உலகுக்கு எவ்வாறு இரட்சிப்பைக் கைகூடிவரப்பண்ணினார்? கடவுள்தான் இவ்வையகத்துக்கு இரட்சிப்பு. ஆனால், எந்த வழியாக இந்த இரட்சிப்பு இந்த மண்ணுலகுக்குக் கிட்டியுள்ளது? இவ்வுலக இரட்சகரே இவ்வினாவிற்கு விடையிறுத்துள்ளார். "*இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது*" என்றார் இயேசு ரட்சகர் (யோவான் 4:22).

இவ்வுலகுக்குத் தேவையானது ஒன்று. ஒன்றே ஒன்று; அந்த ஒன்று ஒன்றல்ல, ஒருவர். அந்த ஒருவர் இயேசு இரட்சகரே. அந்த அகில உலக இரட்சகரை இப்பூவுலகுக்கு வழங்க, பரலோகத் தெய்வம் தெரிந்துகொண்ட பாத்திரம் பாக்கியவதியாகிய பரிசுத்த கன்னி மரியம்மாள். அந்த ஸ்திரீயின் வித்தானவரைப் பெற்றெடுத்த பரிசுத்த கன்னி மரியம்மாள் யூதர் குலத் திலகமன்றோ! "*இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது*" என்று இயேசு இரட்சகர் இயம்பியுள்ளது எத்துணை உண்மை!

ஓர் இரட்சகருக்காக ஏங்கித் தவங்கிடந்தது இவ்வையகம். கடவுளைக் கண்குளிரக் கண்டு, கையாரக் கும்பிடக் காத்துத் தவித்து நின்றது இக்குவலயம்.

கடவுள் தரிசனத்துக்காக எல்லா மக்களும் துடித்து நின்றனர். கண்களால் காணமுடியாத தெய்வம், மனிதர் கண்கொண்டு காணத்தக்கதாக, "கண்கண்ட தெய்வமாக" காசினியில் அவதரிக்கப்போகும் நற்செய்தியை முதன் முதல் கேட்டவர்கள் யூதர்கள்தாம். யூத நாட்டில்தான் தேவ அவதாரம் நடைபெற்றது.

முதன்முதல் இயேசு பகவானுக்குச் சீடர்களாகும் பெருமை யூதருக்கே உரித்தானது. முதன்முதல் கிறிஸ்தவர்கள் யூதர்களே! இக்காலத்திலேயும் *"கிருபையினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது"* (ரோமர் 11:5).

தற்காலத்திலும் யூதர்களில் கொஞ்சம் கிறிஸ்தவர்கள் உண்டு. சுவிசேஷம் முதலாவது யூத நாட்டில் ஆரம்பித்தபோதிலும், கிரேக்கருக்கும் அதில் உரிமை உண்டு. மேனாட்டவருக்கும் அதில் உரிமை உண்டு. கீழ்நாட்டவருக்கும் அதில் உரிமை உண்டு. எல்லா நாட்டினருக்கும், எல்லா மக்களுக்கும் அதில் உரிமை உண்டு.

ஆகையால்தான், அகில உலக இரட்சகரின் திரு அவதாரப் பிறப்பைப்பற்றி உலகுக்கு அறிவித்த தேவதூதன், *"இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்"* என்றான். யூத நாட்டில் திரு அவதாரம் எடுத்த இயேசு இரட்சகர்மூலமாக அகில உலகமும் ஆசீர்வதிக்கப்பட்டது.

ஆம், இவ்வுலகுக்கு ஆசீர்வாதம் தரக்கூடியவர் ஒரே ஒருவர்தான். அந்த ஒருவர் இயேசுநாதரே. இவரை அன்றி இவ்வையகத்திற்கு எத்தகைய ஆசீர்வாதமும் வரப்போவதில்லை. மனிதர் ஆசீர்வாதம் வேண்டும் என்று ஆசிக்கிறார்கள்; அடித்துக் கொள்கிறார்கள்; ஏங்கிக்கிடக்கிறார்கள்.

ஆசீர்வாதத்திற்கு ஒரே ஒப்பற்ற தனிப்பெரும் ஊற்றும் காரணமுமாய் இருப்பவர் இயேசு நாதர் ஒருவரே. அவரே ஆசீர்வாதம். அவரை அன்றி ஆசீர்வாதம் இல்லை. அவரினின்று ஆசீர்வாதத்தைத் தனியே பிரிக்கமுடியாது. அவரை அடைகிறவன் ஆசீர்வாதம் அடைகிறான். அவரை உதறித் தள்ளுகிறவன் ஆசீர்வாதத்தையே உதறித் தள்ளுகிறான். ஆகவே ஆசீர்வாதம் வேண்டும் என்கிறவர்கள் இயேசு பகவானை ஏற்றுக்கொள்ளுதல்வேண்டும். இந்த ஆசீர்வாதம் உலகுக்குக் கிடைப்பதற்கு ஒரு கருவியாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்தான் இஸ்ரவேல் புத்திரர்.

யூதர்கள் மூலம் ஆசீர்வாதம்

"கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு:

நீ உன் புத்திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்;

நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்றும்,

நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஆதி.22:15-18).

இஸ்ரவேல் புத்திரர் இவ்வாறு ஆண்டவரால் ஒரு விசேஷித்த, சிறப்பான ஆசீர்வாதம் பெற்றதற்குக் காரணம் அவர்கள் தாங்கள் பெற்ற ஆசீர்வாதத்தை இவ்வுலகுக்கு இலவசமாக மனமுவந்து வழங்க வேண்டும் என்பதே. *"இலவசமாய்ப் பெற்றீர்கள்; இலவசமாய்க் கொடுங்கள்"*. *"வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்"* என்பது கடவுளின் பொன்மொழிகள் அல்லவா?

"கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.

நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதி.12:1-3).

ஆகவே, இப்பூவுலகிற்குத்தாமே பேராசீர்வாதமாகப் பொழியப்படுவதற்கு ஆண்டவர் தாமே தெரிந்துகொண்ட ஒரு பாத்திரந்தான் இஸ்ரவேல்; அந்த இஸ்ரவேலரை அழைத்தவரும் அவரே; ஆசீர்வதித்தவரும் அவரே; அவர்களுக்குக் குடியிருக்க ஒரு நாட்டை அருளிச் செய்தவரும் அவரே; அவர்களை ஆண்டு நடத்தி வருகிறவரும் அவரே. இஸ்ர

வேல் என்றால், "கர்த்தர் அரசாளுகிறார்" என்பது தான் பொருள்.

கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட இந்த இஸ்ரவேலர் வழியாகவே இவ்வுலகுக்கு ஆசீர்வாதமும், சமாதானமும், சுபிட்சமும், வாழ்வும், இரட்சிப்பும் கிட்டவேண்டும். ஆகவே இஸ்ரவேலருடைய வாழ்க்கை வரலாறும், அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தின் சரித்திர சம்பவங்களும், அவர்களுடைய பரிசுத்த நகரமாகிய எருசலேமின் வரலாற்று நிகழ்ச்சிகளும், உலக வரலாற்றிலேயே தனிப்பெரும் இடம் பெறவேண்டியவை.

இவ்வுலகம் யூதர்களை எள்ளி நகையாடி, வேரறுத்துப் பூண்டோடு அழித்துவிட முடியாது. என்றாலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட யூத சாதியினர் தங்களைத் தயைகூர்ந்து கருணையாகத் தெரிந்துகொண்ட கடவுளை விட்டுச் சோரம் போவார்களேயானால், அவர்கள் அல்லலுற்று அவதியுறுவது திண்ணம் என்று சத்தியவேதம் எத்தனையோ தடவை சிவப்புக்கொடி காட்டி எச்சரிக்கை மேல் எச்சரிக்கை செய்துள்ளது.

தங்களுக்கு மகிமையும், உயிருக்கு உயிருமான கடவுளை விட்டுவிடுவது அவர்கள் உயிருக்கே உலைவைப்பதுபோல் ஆகுமன்றோ? எப்பொழுதெல்லாம் இஸ்ரவேலர் கடவுளைப் புறக்கணித்தார்களோ, அப்பொழுதெல்லாம் யானை தன் தலைமேல் தானே மண்ணை வாரிப்போட்டுக் கொள்வது போன்று, தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொண்டார்கள். மீண்டும் மனம் திரும்பி ஆண்டவரிடம் செல்லும்போதெல்லாம் ஆசீர்வாதம் பெற்றார்கள். இதுதான் இஸ்ரவேல் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்.

இஸ்ரவேலருக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமுமாய் இருந்தவர் கடவுளே. அவர்கள் எல்லாவற்றிற்கும் அவரையே நம்பி இருக்கவேண்டியவர்கள். அவரே அவர்களை எல்லாவற்றிலேயும் ஆண்டு நடத்தவேண்டியவர். ஆனால் அவர்களோ தங்களுக்கும் மற்ற சாதியினருக்கும் இருப்பதுபோல் உலக மன்னர்கள்வேண்டும் என்று ஒருகால் சாதித்தார்கள்.

அவர்கள் விருப்பத்தின்படி ஆண்டவர் விட்டுவிட்டார். ஆனால் இம்மண்ணுலக வேந்தர்கள் எவரும் அவர்களை இரட்சிக்க முடியாதுபோகவே, விண்ணுலக தெய்வமே வந்து அவர்களை மேசியாவாக அரசாள வேண்டும் என்று துடித்து நின்றார்கள். மேசியாவும் வந்தார், அவர்கள் முன்னோர்களும் முனிவர்களும் முன் உரைத்திருந்த எல்லா அடையாளங்களோடும் அற்புதங்களோடும் வந்தார். ஆம், *"அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை"* (யோவான் 1:11).

அவரை அகற்றினார்கள். சிலுவையில் அவரை அறையவேண்டும் என்று கத்தினார்கள். அந்த, *"இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள்"* (மத்.27:25). தங்களுக்கு ஆக்கினையைத் தாங்களே வருவித்துக்கொண்டார்கள்.

(தொடரும்)

வாலிபர் பகுதி

BE ZEALOUS FOR THE LORD
(Pastor M.K.Sam Sundaram)

"And Joshua rose early in the morning; and they removed from Shittim, and came to Jordan, he and all the children of Israel, and lodged there before they passed over" (Joshua 3:1).

Time consciousness

In the life of every youth, time is very important. Joshua was very careful to redeem the time. In the Book of Joshua, chapters 3:1, 6:12 and 8:10 we see that he rose early in the morning. Every young man should follow his example. Men who were used mightily by the Lord were early risers.

Joshua rose early in the morning when he had to fight against Jericho and capture it. Again, when he had to go against Ai, he rose early in the morning. Young men, get up early when you want to fight a war, when you need a miracle to cross a river and when you want to get victory where you have been defeated earlier. Be energetic, rise early and fight your enemy.

Humility and obedience

"And Joshua rent his clothes, and fell to the earth upon his face before the ark of the LORD until the eventide, he and the elders of

Israel, and put dust upon their heads" (Joshua 7:6).

The Israelites couldn't be victorious in the battle against Ai because of the sin committed by Achan of the tribe of Judah. The defeat the Israelites suffered filled Joshua with such sorrow that he lay on the earth upon his face before the ark of the Lord till evening. He humbled himself not only by renting his clothes but also by putting dust on his head as the elders of Israel did.

The defeat of the Israelites broke his heart and he humbled himself before the Lord until the Lord revealed to him the sin which was the reason for the defeat.

The obedience of Joshua is remarkable. In the Book of Joshua 11:15 we read that as the Lord commanded Moses, so Moses commanded Joshua and he did all he was commanded to do. The most striking thing about his character was his absolute obedience to the Lord, because, the same verse says that he left nothing undone of all that the Lord commanded Moses (Joshua received the Lord's command through Moses). It's this kind of absolute obedience that the Lord delights in. Be sensitive to hear the voice of God and obey His command.

Spiritual gifts and talents

"And the LORD said unto Moses, Take thee Joshua the son of Nun, a man in whom is the spirit, and lay thine hand upon him" (Numbers 27:18);

"And Joshua the son of Nun was full of the spirit of wisdom" (Deut.34:9);

God told Moses that Joshua was a man powerful in spirit. And because Moses had laid his hands upon him, he was also full of the spirit of wisdom.

God gives every one gifts and talents and if you recognise them even in your youth, you can use them for God's glory as you serve Him. If you are ignorant of the gifts and talents God has given you or negligent, you will ultimately lose them.

You may have the gift of a good voice and the talent to sing beautifully, or you may be good at playing musical instruments or the ability to teach young children or preach to young people and lead them to the Lord. All these can be used for the purpose for which God has given them to you.

Joshua fought battles and divided the Promised Land among the twelve tribes by the powerful spirit and the spirit of wisdom God had given him.

Long toil

(Joshua 10:28-42).

Youth is the period in one's life when one is full of energy and enthusiasm. It's also the time when a young man can work hard without rest.

Joshua the young man defeated the enemies of Israel and annexed country after country. He conquered the five kings of the Amorites. He also fought against Makedah, Libnah, Lachish, Eglon and Debin and conquered them all.

What do you learn from the exploits of Joshua? Isn't it clear that he fought untiringly, without giving rest to his body? As he was determined to put to rout the enemies of the children of Israel, God also helped him to win the battles.

Dear young children of God, don't idle away your time. Make use of the energy of your youth and labour in the Lord's vineyard. Toil all day long and defeat the enemy who comes against God's children.

Determination

"And if it seem evil unto you to serve the LORD, choose you this day whom ye will serve; whether the gods which your fathers served that were on the other side of the flood, or the gods of the Amorites, in whose land ye dwell: but as

for me and my house, we will serve the LORD" (Joshua 24:15).

Here we read the most powerful words of Joshua which show his determination to serve the Lord with his family even if all the rest of the Israelites chose to serve the gods whom their fathers served. His dedication and firmness to be in the presence of the Lord and to serve Him can be seen in Exodus 33:11 which says, "... *but his (Moses') servant Joshua, the son of Nun, a young man, departed not out of the tabernacle."*

Young men, where do you spend your time? You'll be blessed if you, like Joshua, decide not to leave the presence of God and remain in the house of God day and night.

Joshua wished to be counted among the minority of God's faithful servants rather than being in the company of worshippers of other gods. Like Joshua you should also be firm in your decision to be faithful to the Lord.

In the Book of Daniel 3:16,17, we read about the three Hebrew young men named Shadrach, Meshach and Abednego standing firm against the decree of Nebuchadnezzar, King of Babylon. They were even prepared to be thrown into the fiery furnace heated seven times over, rather than worship the golden image set up by the king. They obeyed the commandment of the Lord that they should not bow down to worship any graven image, and thereby faced the consequences of spurning the king's order.

Young men, how firm are you in your calling and the ministry? Learn from the example set by Joshua and the three Hebrew young men.

Confidence resulting from faith in God

"If the LORD delight in us, then he will bring us into this land, and give it us; a land which floweth with milk and honey" (Numbers 14:8).

If you read vv.6-9 of the same chapter, you'll understand how only Joshua and Caleb, two of the twelve leaders of the tribes of Israel sent to spy out the land of Canaan, spoke confidently about possessing the land. The other ten discouraged the people and made them weep and murmur against God.

Joshua had so much faith in the power of God to give them the land He had promised that he said, *"... he will bring us into this land, and give it us, a land which floweth with milk and honey"*—the exact words the Lord had used in Exodus 3:8. Similarly, he spoke with confidence about the fall of Jericho. He said to the people, *"Shout; for the Lord hath given you the city"* (Joshua 6:16).

Joshua believed every word that the Lord had said about taking the people to the Promised Land and therefore he spoke with faith that they needn't fear the inhabitants of Canaan whom they could easily defeat.

Even in your youth, you should learn to make positive confessions which will strengthen your faith in the Lord. The word 'if' should never proceed from your mouth except to say, "if the Lord should delight in us ..." This should make you analyse your life to see if there's anything that displeases Him. If there is something, the promise of the Lord will not be fulfilled.

The goal

"And Joshua said unto the children of Israel, How long are ye slack to go to possess the land, which the LORD God of your fathers hath given you?" (Joshua 18:3).

There should be a goal in every young man's life and he should strive to reach it. In the life of Joshua, the goal was set by God (Joshua 1:6) and he didn't lose sight of it. He was to conquer the land of Canaan and divide it among the twelve tribes. This goal was always on his mind and it made him fight all the battles and remove all the barriers in reaching the goal.

Every young man should have a goal and press towards it as Paul the apostle did. Paul said, *"I press toward the mark for the prize of the high calling of God in Christ Jesus"* (Phil.3:14).

Dear children of God, follow in the footsteps of Joshua and Apostle Paul and have a vision for your future. Set a goal and accomplish the task you are called upon to do with the help of God.

May the Lord help you to be zealous for Him. Amen.

சிறுவர் பகுதி

"பின்பு, ஜனங்கள் முறையிட்டுக்கொண்டிருந் தார்கள்; அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப் பாயிருந்தது; கர்த்தர் அதைக் கேட்டபோது, அவரு டைய கோபம் மூண்டது; ..." (எண்.11:1).

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்வங்களே! விடு தலைத் தூதனின் இந்த மாத இதழில் என்ன கதை எழுதப்பட்டிருக்கும்? என்று ஆவலோடு பத்திரிகை யைத் திறக்கிறீர்களல்லவா?

சிறு, சிறு காரியங்களுக்கெல்லாம் முறுமுறுத் துக்கொண்டும், முறையிட்டுக்கொண்டும் அனுதின வாழ்க்கையில் எத்தனை பேர் பெற்றோரைத் துக்கப் படுத்திக்கொண்டு இருக்கிறீர்கள்! இது தேவனுக்குப் பிரியமான காரியமோ? இப்படி முறையிடுவதால் என்ன நடக்கும்? இந்தக் கதையைப் படித்து தெரிந்து கொள்ளுங்கள்.

"கிரேஸி! இங்கே வாயேன்; உனக்காக அப்பா வாங்கி வந்திருக்கும் புதிய சட்டையைப் பாரேன்; எவ்வளவு அழகாக இருக்கிறது!" என்று கூப்பிட் டாள், அவளது தாயார்.

ஓடி வந்த கிரேஸி, அந்தச் சட்டையைக் கையில் எடுத்துப் பார்த்தாள். "ஏம்ப்பா! கொஞ்சம் லைட் கலரா இருந்தா, நன்றாக இருந்திருக்கும்; சரி, சரி ஓ.கே" என்று சொல்லி, அதை எடுத்துச் சென்றாள். கர்த்தருக்குப் பயந்து, பெரியவர்களுக்குக் கீழ்ப்படிந்து அனைவருக்கும் ஒரு அருமையான பிள் ளையாய் இருந்தாலும், அவளிடத்தில் ஒரு குறை இருந்தது. எந்த ஒரு காரியத்தையும் அவள் சந்தோஷ மாக ஏற்றுக்கொள்ளமாட்டாள். ஏதாவது குறை கூறிக்கொண்டும், முறுமுறுத்துக்கொண்டும்தான் இருப்பாள்.

அவள் பெற்றோர், "இது நல்ல குணமல்ல", என்று அநேக முறை எச்சரித்தனர். தான் செய்வது தவறு என்று அவள் அறிந்திருந்தும் அதை மேற் கொள்ள முடியாமல் அவள் தவித்தாள். இதனால் அவள் பெற்றோரும் வருத்தமடைந்தனர். என்ன செய்வது என்று தெரியாமல் கர்த்தரிடத்தில் இந்தக் காரியத்தை ஒப்புவித்து, ஜெபித்து வந்தனர்.

மறுநாள் மாலை, பள்ளியிலிருந்து வீடு திரும் பிய கிரேஸிக்கு, அவளுக்குப் பிடித்தமான பணி யாரங்களைக் கொடுத்து, சாப்பிடும்படிச் சொன் னாள், அவளது தாயார். சாப்பிடத்தொடங்கிய கிரேஸி, "என்னம்மா, இது! கொஞ்சங்கொஞ்சம் கருகியிருக்கிறது; கொஞ்சம் இனிப்பு அதிகமாக இருந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்" என்று முறையிட்டாள்.

"கிரேஸி! நீ இப்படி முறையிடுவதற்குப் பதி லாக ஜெபித்து, சாப்பிட்டிருக்கலாம்" என்று சொன் னாள், அவள் அம்மா.

"அம்மா! பள்ளியில் நான் ஆங்கில பேச்சுப் போட்டிக்குப் போகப் பெயர் கொடுத்திருக்கிறேன். அது பள்ளிகளுக்கிடையிலான போட்டி. ஆனால் ..." என்று வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினாள், கிரேஸி.

"ஆனால், என்னம்மா? உனக்குப் பிடிக்கவில் லையா? அல்லது, கடினமான தலைப்பைக் கொடுத் துவிட்டார்களா?" என்று அவள் தாயார் கரிசனை யோடு கேட்டாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை; நான் பேச்சுப் போட்டிக்காகப் போகும் பள்ளி ஒரு சிறிய பள்ளி யாம். அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியருக்குச் சரளமாக ஆங்கிலம் பேச முடியாதாம். ஆனாலும், அவர்தான் பேச்சுப்போட்டிக்கு நடுவராக நியமிக்கப் பட்டு இருக்கிறாராம். ச்சே, என்ன பள்ளி அது" என்று சலித்துக்கொண்டாள், கிரேஸி.

அவள் தாய் அவளை அணைத்துக்கொண்டு, "கிரேஸி! ஆசிரியர்களையெல்லாம் அப்படித் தரக் குறைவாகப் பேசக்கூடாது. இப்படி எல்லாரிடமும் முறையிடுவதைக் காட்டிலும் இயேசு அப்பாவிடம் சொன்னால், அவர் உனக்காகக் காரியத்தை வாய்க் கப்பண்ணுவாரே" என்று ஆலோசனை கூறினாள்.

அப்பொழுது அவள் தந்தையும் அலுவலகத்தி லிருந்து வீடு திரும்ப, அவரிடமும் இதே முறையீடு

தான். ஆகவே, அவளைத் திசைதிருப்புவதற்காக, கடைக்கு அழைத்துச் சென்றார் அவளது அப்பா. அழகிய பேனா ஒன்றை வாங்கித் தந்தார். சந்தோஷமாக வீட்டிற்கு வந்த கிரேஸி, ஒரு தாளை எடுத்து எழுதினாள்.

"அப்பா! இந்தப் பேனா சரியாகவே எழுதவில்லை; வேறொரு கடையில் சென்று வாங்கியிருக்கலாம்" என்று சொன்னாள், கிரேஸி.

அவள் தந்தையோ பதிலொன்றும் சொல்லாமல் அமைதியாய் யோசித்துக் கொண்டிருந்தார். அன்றிரவு குடும்ப ஜெபத்திற்கு அனைவரும் கூடினர். கிரேஸியின் தந்தை அவளை அன்போடு அழைத்து, அவளைத் தம் அருகில் அமரச்செய்தார்.

"கிரேஸி, உன் வேதாகமத்தை எடுத்து, எண்ணாகமம் 11:1 வாசி" என்றார்.

"என்ன அப்பா! எப்பொழுதும் சங்கீதம் அல்லது நீதிமொழிகளிலிருந்து வசனங்களை வாசிக்கச் சொல்லுவீர்கள்; இன்று எண்ணாகமத்திலிருந்து வாசிக்கச் சொல்லுகிறீர்களே" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள், அவள்.

"இன்று ஒரு வசனம் போதும்; வேதாகமத்தை எடுத்து, நீ சத்தமாகவும் தெளிவாகவும் அந்த வசனத்தை வாசி, கிரேஸி" என்று அமைதியாகச் சொன்னார் அவளது தந்தை.

"பின்பு ஜனங்கள் முறையிட்டுக்கொண்டிருந்தார்கள்; அது கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருந்தது. கர்த்தர் அதைக் கேட்டபோது அவருடைய கோபம் மூண்டது" என்று வாசித்து, அதன் பின்பு வாசிக்க முடியாமல் நிறுத்தினாள்.

"வாசிம்மா, முழுவதும் வாசி!" என்று சொன்னார் அவள் தந்தை.

ஆனாலும், அவளால் தொடர்ந்து வாசிக்க முடியவில்லை. அந்த வசனம் அவளுடைய பாவத்தைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியதால், அவள் தன்னுடைய தவறை உணர்ந்தாள், செய்வதறியாது திகைத்தாள்.

அவள் தந்தை அவளிடம் பொறுமையாகப் பேச ஆரம்பித்தார். "கிரேஸி! நீ எல்லா காரியத்தைக் குறித்தும் முறையிட்டுக்கொண்டிருக்கிறாய் என்பதை நான் அறிவேன். இது நல்லதல்ல. அன்று இஸ்ரவேலர் முறையிட்டுக் கொண்டிருந்தது, கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருந்தது. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் அல்லவா? அப்படியானால் இன்று நீ எல்லாவற்றிற்காகவும் முறையிட்டுக் கொண்டிருப்பதும் கர்த்தருடைய செவிகளில் பொல்லாப்பாயிருக்கும் என்பதை மறந்துவிடாதே" என்றார்.

"தேவனைப் பிரியப்படுத்திப் பார்ப்பதா, அல்லது அவரைக் கோபப்படுத்திப் பார்ப்பதா, எது முக்கியம்? நமக்காக ஜீவனையே கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்தாமல், முறையிடுவது எவ்வளவு தேவையற்றது என்பதை நீ உணர்ந்துகொள்ள வேண்டும். எத்தனையோ பிள்ளைகள் அடிப்படைத் தேவைகளைக்கூட பெற்றுக்கொள்ளாமல் இருக்கும் போது, நீ இப்படி முறையிடுவது தேவனுக்குப் பிரியமாயிராது" என்று கூறினார்.

அந்த வசனம் அவளுக்குள் கிரியை செய்ய ஆரம்பித்தது. இவ்வளவு நாளாக, தான் தேவனுக்கு நன்றி சொல்லாமல் முறையிட்டுக் கொண்டிருந்தது எவ்வளவு தவறு என்று எண்ணி, தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். தனக்கு எல்லா நன்மைகளையும் தந்தருளின தேவனைக் கோபப்படுத்திவிட்டோமே என்று வருந்தினாள்.

"இனி ஒருபோதும் இப்படி முறையிடமாட்டேன்" என்று தன் பெற்றோரிடம் உறுதி கூறினாள். அவர்களும் அவளுடைய உறுதியான தீர்மானத்தைப் பாராட்டினர்.

கிறிஸ்துவுக்குள் அன்பான தம்பி, தங்கைகளே! நீங்களும் கர்த்தர் உங்களுக்குச் செய்த நன்மைகளை நினையாமல் அசட்டைபண்ணி, சிறு சிறு காரியங்களுக்குங்கூட முறையிட்டுக்கொண்டிருப்பீர்களானால், அது தேவனுடைய செவிகளில் பொல்லாப்பாயிருக்கும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். இன்று முதல் தேவனைப் பிரியப்படுத்தும் பிள்ளைகளாக மாறுவீர்களாக.

சாட்சிப் பகுதி

எனது பெயர் மோசஸ். கடந்த வாரத்தில் என் வாழ்வில் பெரிய அதிசயத்தையும், அற்புதத்தையும் கர்த்தர் செய்தார். பிறந்த நான்கு மாதங்களே ஆன எனது கைக்குழந்தை உறங்கிக்கொண்டு இருந்தான். எனது மனைவி துணிகளைத் துவைத்துக்கொண்டு இருந்தாள்.

குழந்தை தனியாக உறங்குகிறானே என்று எண்ணிய எனது மனைவி, பக்கத்துவீட்டில் இருப்பவர்களிடம் குழந்தையைப் பார்த்துக்கொள்ளும்படிச்

சொன்னாள். அவள் சொல்லிவிட்டு வந்த அடுத்த வினாடியில், மேலேசுற்றிக் கொண்டிருந்த மின் விசிறி, உறங்குகின்ற குழந்தை அருகில் தானாகவே வந்து விழுந்தது. கர்த்தர் என் குழந்தையையும் என் மனைவியையும் காப்பாற்றினார்.

கர்த்தர் நம்மை இரவும், பகலும் உறங்காமல் காக்கிறவர் என்ற வேதவசனத்தை நன்கு உணர்ந்தேன். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

கே. மோசஸ்
கோயம்பேடு

சபையின் செய்திகள்

1. விதவைகளுக்கான சிறப்புக் கூட்டம்

18.12.07 காலை 10 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையில் வாழும் விதவைகளுக்காகச் சிறப்புக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது.

அப்போது, தலைமைப் போதகர் எம்.கே.சாம் சுந்தரம் அவர்கள், விதவைகளை ஊக்குவிப்பதற்கான சில அருளுரைகளை வேதத்தினின்று எடுத்துரைத்தார். ஆசீர்வாத ஜெபத்திற்குப் பின்னர், சிறப்பு விருந்து அளிக்கப்பட்டு, கூட்டம் இனிதே முடிந்தது. வட்டாரப் போதகர்களின் உதவியுடன் அவர்களுக்குச் சேலைகளும் வழங்கப்பட்டன.

2. இலவச கூட்டுத் திருமணம்

20.12.07 காலை 10 மணி அளவில், 7 தம்பதிகளுக்கான திருமணத்தை அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையின் தலைமைப் போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்கள் பொறுப்பேற்று நடத்தி, குடும்பத்திற்குத் தேவையான பல பொருள்களை அளித்து, தம்பதிகளை ஆசீர்வதித்தார்.

இத்திருமணத்திற்கான உதவித்தொகைகள், பொருட்கள் முதலியவற்றைச் சபை நலத்தில் அக்கறை கொண்டவர்களும் வழங்கினர். சிறப்பான முறையில் திருமணங்கள் நடைபெற்றன. திருமணத் தம்பதிகளது உறவினர்களுக்கும், மற்றும் திருமணத்தில் பங்கேற்றவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

3. சிறப்புக் கூட்டங்கள்

29.12.07, 30.12.07 ஆகிய நாட்களில் அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையில் சிறப்புக் கூட்டங்கள் நடைபெற்றன. அவ்வமயம் சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் அவர்களும், சகோதரர் பால் தினகரன் அவர்களும் சிறப்புச் செய்திகளை வழங்கினர்.

31.12.07 இரவு 9.30 மணி அளவில், புது வருடத்திற்குள் பிரவேசிப்பதற்கான விழிப்பிரவு ஆராதனை நடந்தது. தலைமைப் போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்கள், எல்ஷடாயின் ஆசீர்வாதங்களைக்குறித்ததான ஐந்து அம்சங்களை, புத்தாண்டின் வாக்குத்தத்தங்களாக எடுத்துரைத்தார். திருவிருந்து அருளப்பட்டு, 1.1.08 காலை சுமார் 3.30 அளவில் கூட்டம் இனிதே முடிந்தது.

1.1.08 மாலை 6 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையில் சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன், சகோதரர் பால் தினகரன் அவர்களும், புத்தாண்டுக்கான சிறப்புச் செய்திகளை வழங்கினர். தீர்க்கதரிசன உரைகளும் அன்னார் மூலம் வழங்கப்பட்டன.

4. அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபை உடன் ஊழியரின் கூடுகை

3.1.07 காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபையின் உடன் ஊழியர்களின் கூடுகை கூடிற்று.

துதி ஆராதனையைப் பொறுப்பேற்று நடத்திய தலைமைப் போதகர் எம்.கே.சாம் சுந்தரம் அவர்கள், நெகேமியா 2:17,18 வசனங்களை மையமாகக் கொண்டு, ஊழியர்கள் தத்தம் ஊழியங்களை எவ்விதம் எழுந்து கட்டவேண்டும் என்பதுகுறித்ததான ஐந்து அம்சங்களை அழகாக எடுத்துரைத்தார்.

ஊழியர்கள் தங்களது ஊழியங்களின் முன்னேற்றத்திற்கான தீர்மானங்களை எடுக்கவேண்டும் (நெகே.2:17,18); தங்களது ஊழியத்தைக் கட்டும் வேளையில் ஏற்படும் அதைரியங்களை மேற்கொள்ளவேண்டும் (நெகே.4:1-11); நெகேமியாவைப் போல ஊழியர்கள் தங்களை முற்றுமாக அர்ப்பணிக்கவேண்டும் (நெகே.4:9); நெகேமியா தேவனை நினைத்துக்கொண்டிருந்ததுபோல, ஊழியர்கள் தேவனைச் சார்ந்து வாழ்தல்வேண்டும் (நெகே.4:14); அலங்கம் கட்டி முடிந்த பின்னர் நெகேமியா அகமகிழ்ந்ததுபோல, ஊழியர்கள் தங்கள் ஊழியம் நிறைவேறிவருகிறதுகுறித்து அகமகிழவேண்டும் (நெகே. 4:7, 6:1) என்று விளக்கினார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்னர், தலைமைப்போதகரின் ஆசீர்வாதத்துடன்

மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் இனிதே முடிந்தது.

5. அப்போஸ்தல கிறிஸ்தவ கிளைச் சபை ஊழியர்களின் கூடுகை

7.1.08 காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ கிளைச் சபை ஊழியர்களின் கூடுகை தலைமைச் சபை வளாகத்தில் கூடிற்று.

போதகர் ஆனந்த் அவர்கள், துதி ஆராதனையைப் பொறுப்பேற்று நடத்தினார். போதகர் தாமஸ் ராஜ் அவர்கள், 1 நாளா.23:13 ஐ மையமாகக்கொண்டு தேவனை ஆராதிக்கவே ஊழியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்றுள்ள சத்தியத்தை மூன்று குறிப்புகளோடு விளக்கினார்.

மகிழ்ச்சியோடே தேவனை ஆராதிக்கவேண்டும் (சங்.100:2) என்றும், கர்த்தரிடம் சேர்ந்து அவரை ஆராதிக்கவேண்டும் (எசேக்கியேல் 43:19) என்றும், சுத்தமனச்சாட்சியோடே தேவனை ஆராதிக்கவேண்டும் (2 தீமோ.1:4) என்றும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்னர், தலைமைப் போதகரின் ஆசீர்வாத ஜெபத்தோடு கூட்டம் இனிதே முடிந்தது. மதிய உணவும் வழங்கப்பட்டது.

News

பாக்., மதரசாக்களின் சீர்திருத்த ஆலோசகராக இந்து அதிகாரி நியமனம்

மதரசாக்கள் பதிவு மற்றும் அதன் சீர்திருத்தங்கள் பற்றி பாக்., பிரதமருக்கு ஆலோசனை வழங்க, இந்து அதிகாரி ஒருவர் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாக்., இடைக்கால பிரதமரான முகமது மியான் சூம்ரோவின் உதவி சிறப்பு அதிகாரி அமர்லால். இவர் மதரசாக்களின் பதிவு மற்றும் சீர்திருத்தங்குறித்து பிரதமருக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவி அந்நாட்டின் அமைச்சர் பதவிக்கு இணையானது. மத விவகாரங்கள்துறை செயலருடைய வக்கீல் அகமதுகானுக்கு அமர்லால் எழுதியுள்ள கடிதத்தில், மதரசாக்களின் சீர்திருத்தங்கள் மற்றும் பதிவு ஆகியவைக்குறித்த அனைத்து ஆவணங்களையும், மதரசாக்களின் பாடத்திட்டங்கள் பற்றிய விவரத்தையும் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார் என்று டெய்லி டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

தினமலர் 11.01.08

டில்லியில் 42 கோடி மனிதஉழைப்புமணிநேரம் இழப்பு

டில்லியில் சில பகுதிகள் தவிர, பெரும்பாலான பகுதிகளில், காலையிலும், மாலையிலும் போக்குவரத்து நெரிசல் கடுமையாக உள்ளது.

இதில் பெரிதும் பாதிக்கப்படுவோர், அன்றாட தினக்கூலி வாங்குவோர் முதல் ஆபீசில் வேலை செய்வோர்தான். அவர்களுக்கு வேலை செய்யும் நேரத்தைவிட, பஸ்சில் பயணஞ்செய்யும் நேரம்தான் மிகஅதிகம்.

ஒருவருக்கு, குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 5 மணிநேரம் வீணாகிறது; காலையில் 6 மணிக்கு வேலைக்குக் கிளம்பி, இரவு 10 மணிக்குத் திரும்பும் நிலையில் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள், கட்டுமானப்பணி உட்பட பல துறை தொழிலாளர்கள் உள்ளனர்.

அரசு ஊழியர்கள் மாலை 5 மணிக்கு வீட்டுக்குக் கிளம்பினாலும், போய்ச் சேர 2 முதல் 3 மணிநேரம் ஆகிறது. போக்குவரத்து நெரிசலால், இவர்கள் வேலைக்கு வந்து செல்வது மிகவும் கஷ்டமாக உள்ளது. இவர்களுக்கு நேரம் வீணாவதுடன், இவர்களின் மனிதஉழைப்புநேரம் மிகவும் பாதிக்கப்படுகிறது. இதனால் உற்பத்திப்பணிகள் கடுமையாக தாமதம் ஆகிறது.

போக்குவரத்து நெரிசலைப் போக்க, நியூயார்க், லண்டன், பிஜீங் போன்ற சர்வதேச நகரங்களில் உள்ள அதிவேக போக்குவரத்து திட்டங்கள்போல, டில்லியிலும் நிறைவேற்றவேண்டும்.

டில்லியில் இரண்டு சக்கர வாகனங்கள் உட்பட 11 கோடியே 20 இலட்சம் வாகனங்கள் உள்ளன. போக்குவரத்து நெரிசலுக்கு அவைதான் காரணம்.

சர்வதேச அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

தினமலர் 11.01.08

I am a soldier

I am a soldier in the army of God.
The Lord Jesus is my commanding officer,
The Holy Bible is my code of conduct,
Faith, Prayer and the Word are my weapons of warfare.
I have been taught by the Holy Spirit,
Trained by experience, tried by adversity and tested by fire;
I am a volunteer in this army, I am listed for eternity.
I will either retire in this army at the rapture or die in this army,
But I will not get out, sell out, be talked out or pushed out.
I am faithful, reliable, capable, and dependable.
If my God needs me, I am there;
If He needs me in Sunday school to teach the children,
Work with the youth, help adults or just sit and learn,
He can use me because I am there.

I am a soldier

I am not a baby, I do not need to be pampered,
Petted, primed up, pumped up, picked up, pepped up.

I am a soldier

No one has to call me, remind me, write to me,
Visit me, entice me or lure me.

I am a soldier

I am not a wimp, I am in place saluting my King, obeying His orders,
Praising His name and building His kingdom.
No one has to send me flowers, gifts, food, cards, candy or handouts;
I do not need to be cuddled, cradled, cared for or catered to,
I am committed; I cannot have my feelings hurt bad enough to turn me around,
I cannot be discouraged enough to turn me aside;
I cannot lose enough to cause me to quit.

I am a soldier

When Jesus called me to this army I had nothing;
If I end up with nothing, I will still come out ahead; I will win.
My God has and will continue to supply all my needs.
I am more than a conqueror, I will always triumph,
I can do all things through Christ.
The devil cannot defeat me, people cannot disillusion me,
Weather cannot weary me, sickness cannot stop me,
Battles cannot beat me, money cannot buy me,
Governments cannot silence me, and hell cannot handle me.

I am a soldier

Even death cannot destroy me, for when my Commander calls me from the battlefield,
He will promote me to captain, and then promote me to rule with Him.

I am a soldier

In the army I am marching, claiming victory I will not give up, I will not turn around.

I am a soldier

I am marching, I am heaven-bound,
How many people are in the house of God? (2)
How many people can eyeball the devil, eyeball to eyeball and tell the devil:
"Greater is He that is in me than he that is in the world?"
Don't underestimate what God can do for you—God can do anything.
My desire, my prayer is that you will be a mighty soldier in the army of God.
Nobody might pat you on the back and say, "Well done." Don't worry about what people have got to say.
On the day of Judgement God will say to you, "Well done, well done, you good and faithful servant, enter into the joy of the Lord your God."
Hallelujah!

Reg. Number TN/CCN/203/06-08. Licence to the post under WPP No.TN/CCN/85/06-08
Regd. Under Regis. of News paper for India No.(1)1295/57, Posting date 29th & 30th of every month.
Date of Publication : monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai-600 008.

ஏ.சி.ஏ. இலக்கிய ஊழியத்தின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள நூல்களின் பட்டியல்

Book - Rs.5

1. உங்கள்மீதுள்ள அபிஷேகம்
2. தேவன் தரும் நன்மைகள்
3. விசுவாசிகளின் சாட்சிகள்
4. வாக்குத்தத்தங்கள் 60
5. சாட்சிகள் 60
6. ரூத்தின் சரித்திரம்
7. அநுபவ சாட்சிகள்
8. உத்தம சாட்சிகள்
9. இயேசுவின் அன்பு (சாட்சிகள்)
10. எஸ்தர்
11. இயேசு கிறிஸ்து மாறாதவர்
12. ஒளி வீசும் சாட்சிகள்
13. முரண்பாடுகள்
14. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
15. இவர் யார்? இயேசு எப்படிப்பட்டவர்
16. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
17. ஆவிக்குரிய வேதசத்தியங்கள்
18. Jesus met me in Jail
19. Spiritual truths from the Bible

Book-Rs.10/-

20. அநாதி கிருபை
21. கல்வாலிமரம்
22. பக்திவிருத்தி உண்டாக்கும் சாட்சிகள்
23. ஜெபத்தின் வல்லமை
24. அழைத்தவர் உண்மையுள்ளவர்
25. சிலுவையின் உபதேசம்
26. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
27. தீவிரவாதியின் ஆன்மீக விடுதலை
28. நீதிமான்கள்
29. கிறிஸ்துமஸ் செய்திகள்
30. புத்தாண்டு வாக்குத்தத்தச் செய்திகள்
31. இயேசு உயிர்த்தெழுந்தார்
32. நீதியின் சூரியன்
33. பரதேசிகளாகிய நாம்
34. கிறிஸ்துவ குடும்பம்
35. நித்திய பிரதான ஆசாரியர்
36. சபை சபைதானா?
37. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
38. புத்தாண்டு தேவசெய்திகள்
39. விழித்திரு
40. சிலுவைக்கு அப்பால்
41. வணக்கம்
42. இனிமேல்
43. இரட்சிப்பின் சாட்சிகள்
44. ஜீவனுள்ள சாட்சிகள்
45. அற்புத சாட்சிகள்
46. சாட்சிகள்
47. எரி நரகத்திற்கு தப்பினேன்
48. மாபெரும் மாற்றம்
49. நன்றியுள்ள சாட்சிகள்
50. கல்லூரியில் அற்புதங்கள்
51. நற்செய்தி கதைகள்
52. தீப ஒளி
53. வழிகாட்டும் கதைகள்
54. அந்தக் கடிதங்கள்
55. அந்த மயில்கள்
56. வாலிபருக்கு
57. கனமான ஊழியம்
58. வெளிச்சம்
59. ஆத்தும நேசர்
60. மேகம்
61. ஐக்கியம்
62. கொடி
63. இன்னும் சந்தேகமா?
64. மேய்ப்பரின் கருத்துரைகள்
65. அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
66. ஆபிரகாமின் தேவன்
67. இரட்சிப்பின் படிகள்
68. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
69. மேய்ப்பரின் அறிவுரைகள்
70. ஒருவருக்கொருவர்
71. ஒரு பிராமணரின் மறுபிறப்பு
72. சிறுவர்களுக்கான சிறுகதைகள்
73. பேசும் தெய்வம்
74. முதலாம் ஆதாம்
75. ஆசீர்வாதங்களின் திறவுகோல்
76. நீரே என் மேய்ப்பர்
77. தேவ ஊழியம்
78. உத்தம ஊழியம்
79. பரிசுத்த பர்வதம்
80. Eternal Grace
81. The Star
82. The New year
83. Spiritual Questions
84. The Timely warning
85. The Blessing
86. Your response to the cross
87. The power of prayer
88. Springs in the valley
89. A Narrow escape from hell

Book-Rs.15/-

90. ஏழு வார்த்தைகள்
91. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
92. இயேசு கூறின உவமைகள்
93. அதிசயமான தேவ கிருபை
94. Amazing Grace of God

Book - Rs.20/-

95. என் நேசரின் சத்தம்
96. தேவனுடைய வாக்குத்தத்தச் செய்திகள்
97. தேவனுடைய வாக்குத்தத்தச் செய்திகள் 2004
98. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 1
99. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 2
100. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
101. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
102. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 1
103. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 2
104. Successful Ministers of the Lord
105. Messages of God's Blessings Part 1
106. Messages of God's Blessings Part 2

Book - Rs.25/-

107. A Good Soldier of Jesus Christ
108. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 3
109. தேவனுடைய வாக்குத்தத்தச் செய்திகள் 2005
110. தேவனுடைய வாக்குத்தத்தச் செய்திகள் 2006

Book - Rs.30/-

111. நல்ல போர்ச்சேவகன்
112. ஆவிக்குரிய தேவசெய்திகள்

வேண்டுவோர் விரும்பும் நூல்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி

24hrs Prayer line: 26625815

Herald of Deliverance

Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622388/26622775 website:www.acaprayerhouse.org

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 26622021 e-mail: acalm@acaprayerhouse.org

Printed by Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026. Phone: 24726885/Cell:9841429079